விலை: 50.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23

ஒலி 043 வள்ளுவர் ஆண்டு 2053 தை 18 திங்கட்கிழமை (31.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கலயாண மாலை

சர்வதேச திருமண சேவை



T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com

1500/= + 500/=


## “சமஷ்டி” தீர்வை அடைய

### இந்தியாவும் ஏனைய நாடுகளும் இலங்கையை வலியுறுத்த வேண்டும்

முன்னணியின் கிட்டுப் பூங்கா பிரகடனத்தில் அறைகூவல்



(யாழ்ப்பாணம்)

“சமஷ்டி” அடிப்படையிலான தீர்வை அடைய இந்திய அரசும் ஏனைய நட்பு நாடுகளும் இலங்கையை வலியுறுத்த வேண்டும் என 13 இற்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நேற்று நடத்திய ஆர்ப்பாட்ட பேரணியில் பிரகடனம் செய்யப்பட்டது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## எச்சந்தர்ப்பத்திலும் 13 ஐ தீர்வாக கோரவில்லை

இரா. சம்பந்தன்

3 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். சர்வதேச விமான நிலையம் விரைவில் திறப்பு

அமைச்சர் ஜி.எல். பீரிஸ்

3 ஆம் பக்கம் பார்க்க

மாகாண சபை முறைமையை சில திருத்தங்களுடன்

## அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

13ஆம் திருத்தச் சட்டத்தில் உள்ள மாகாண சபை முறைமையில் சில திருத்தங்களை மேற்கொண்டு தொடர்ந்து அதனை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வழங்கப்பட்ட அதிகாரங்களை மீளப் பெறுவதற்கு எந்தவொரு திட்டமும் இல்லை.

13 ஆம் திருத்தச் சட்டத்தில் உள்ள மாகாண சபை முறைமையில் சில திருத்தங்களை மேற்கொண்டு தொடர்ந்தும் அதனை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த காலத்தில் மாகாண சபை இயங்கிய போதும், எந்த அபிவிருத்தியையும் முன்னெடுப்பதற்கு சிறுபான்மை கட்சிதலை 15

ஜே.வி.பியின் தலைவர்

## அனுரகுமார மீது முட்டைத் தாக்குதல்

(கம்பஹா)

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க மீது முட்டைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே இத்தாக்குதல் நடைபெற் 15

## ஆயிரத்தைக் கடந்த தொற்றாளர்கள்

### நாட்டில் நேற்றும் 1,056 பேர் பாதிப்பு

(கொழும்பு)

கோவிட் தொற்று உறுதியான மேலும் 1,056 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். 15






## பெப்ரவரி இறுதிக்குள் நாடு முழுவதும் ‘ஒமிக்ரோன்’ திரிபு பரவும் அபாயம்

பிரதி சுகாதார பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை



(கொழும்பு)

நாட்டில் ஏற்கனவே டெல்டா வைரஸ் பரவிக்கொண்டுள்ள நிலையில் அதனை விடவும் பல மடங்கு வேகமாக ஒமிக்ரோன் வைரஸ் பரவுவதை அவதானிக்க முடிகின்றது.

இந்த நிலைமை தொடருமானால் பெப்ரவரி மாத இறுதிக்குள் 15

பரீட்சையின்போது

## மின்துண்டிப்பை ஏற்படுத்தாதீர்

கல்வியமைச்சர்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை நடைபெறும்போது மின் 15

## நாவற்குழியில் விபத்து; பெண் ஒருவர் உயிரிழப்பு

பேருந்திலிருந்து இறங்கியபோது கால் தடுமாறி சக்கரத்திற்குள் விழுந்துள்ளார்

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவற்குழிப் பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கைதடியைச் சேர்ந்த 15

## கொரோனா 20 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும் 15

## தொழிற்சங்கங்களை முடக்க அரசு முயற்சி

எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

தொழிற்சங்கங்களை அடக்குவதற்கும் வேலை நிறுத்தங்களை தடுக்கவும் அரசாங்கம் முயற்சிக்கிறது. இந்த ஜனநாயக விரோத நடவடிக்கையை ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாக கண்டிப்பதோடு, 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தனின் கையொப்பத்துடன் ஐ.நாவுக்கு விரைவில் கடிதம்

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கையொப்பத்துடன் ஜெனிவாவுக்கு கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியினுடைய நிலைமைகள், தற்போதைய நிலைமைகள், எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் பேசி சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்களுடைய நிலங்கள் அபகரிக்கப்படும் பிரச்சினை.

இது எல்லா மாவட்டங்களிலும் பூதாகரமான பிரச்சினையாக எழுந்திருக்கின்றது. இது சம்பந்தமாக பொது அமைப்புக்கள், ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஒரு பொது வேலைத் திட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என தீர்மானித்துள்ளோம். எல்லோரும் இணைந்து நிலங்கள் அபகரிக்கப்படுவதை தடுப்பது எங்களது பிரதானமான கடமையாக நாங்கள் கருதுகின்றோம்.

வருகின்ற மாதம் 28ஆம் திகதி ஐ.நாவில் ஆரம்பமாகவுள்ள ஜெனிவா பேரவை கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான எழுத்து மூலமான அறிக்கையை உயர்தானிகராலயம் வெளியிடும். மார்ச் 3ஆம் திகதி இலங்கை சம்மந்தமான ஒரு ஆய்வு நடைபெறும்.

அதற்கு உதவியாக இன்றைய நிலையை அவர்களுக்கு அறியத்தருவது தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் இணைந்து மற்றைய பங்காளிக் கட்சிகளுடனும் இணைந்து ஒரு ஆவணத்தை தயார் செய்கிறோம் என்றார்.(ம-250,299)


## கணக்காய்வு செய்வதற்கான விண்ணப்பம்

### ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம் கொக்குவில்

01.01.2021 தொடக்கம் 31.12.2021 வரைக்கான கணக்காய்வு செய்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. ஆர்வமுள்ளோர் 15.02.2022 க்கு முன்னர் **செயலாளர், ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம், கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு** என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

செயலாளர்
பரிபாலனசபை

(9933)


# மரண அறிவித்தல்

பிரபல விஷகடி வைத்தியர்

## கலாபூஷணம் சண்முகம் பஞ்சாட்சரம்

(ஓய்வுபெற்ற விற்பனைத் திணைக்கள ஊழியர்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல விஷகடி வைத்தியர் சண்முகம் பஞ்சாட்சரம் அவர்கள் நேற்று (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - அன்னம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் மதுரவேணியின் அன்புக் கணவரும் சண்முகதாசன் (சுவிஸ்), சந்திரதாசன் (சுவிஸ்), றமணி, வசந்தினி (பிரான்ஸ்), 'உசந்தினி (ஜெயந்தி), மதுரகாந்தன் (தபாலக உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியவாணி (சுவிஸ்), ஹேமலதா (சுவிஸ்), காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் இராசலிங்கம் (பிரான்ஸ்), சுதர்சன் (இலங்கைப் போக்குவரத்து சபை), விஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் சாருகா, ஹப்றினா, சோபியா, சனுஜா, லக்ஸ்மியா, ரதுசன், நீருஜா, மீனுஷா, விதுரன், சங்கீதன், சார்மீகன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான நாகமணி பாக்கியலட்சுமியின் பெறாமகனும் அன்னலட்சுமி, செல்லமணி, புஸ்பமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வல்லிபுரம் - வள்ளிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான கலாபூஷணம் V.K.இரத்தினம், ஐயாத்துரை மகாலெட்சுமி மற்றும் நாகமணி சிவபாக்கியம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் செல்வராசா - சிவனேஸ்வரி, சின்னராசா - இராசகிளி, தாமு - கனகம்மா, சின்னத்தம்பி - சீதேவி, பொன்ராசா - கமலேஸ்வரி, துரைராசா - இந்திரபுவனேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.01.2022) திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

39, வேலப்பர் லேன், அரியாலை. (9951)

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே:- 077 852 9957, 074 205 9686 (மகன்)

# 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 19 . 07 . 1967



மறைவு 02 . 01 . 2022

கடந்த 02.01.2022 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் சுவாம்பிள்ளை தேவராசா

அவர்களின் 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி நிகழ்வும் நாளை (01.02.2022) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியிலிருந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துசிறப்பிக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் நல்லடக்க நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி, கண்ணீர் அஞ்சலி, மலர்வளையங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் பலவழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நீதிமன்ற வீதி, மல்லாகம். (C-3668)

குடும்பத்தினர்
076 498 7601

# மரண அறிவித்தல்

## திருமதி புஸ்பமலர் திருநாவுக்கரசு



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பமலர் திருநாவுக்கரசு கடந்த 29.01.2022 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நேசரத்தினம் - ரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சதீசன், சபேசன் மற்றும் சபீதா, சர்மிலா, சங்கீதா ஆகியோரின் அன்புத் தாயாரும் குகேந்திரன், திலீபன், நிரோஷன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சாம்பவி, சிவஜன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (01.02.2022) செவ்வாய்க்கிழமை நாகேஸ்வரி வித்தியாலய வீதி, பருத்திக்கலட்டி, சுன்னாகத்தில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்திக்கலட்டி, சுன்னாகம். (9942)

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே:- 076 870 6048, 077 718 0521

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '13' ஐ தீர்வாக எச்சந்தர்ப்பத்திலும் நாம் கோரவில்லை-இரா.சம்பந்தன்

(கொழும்பு)

**13ஆவது திருத்தச்சட்டத்தினை தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையிலான அரசியல் தீர்வாக ஏற்றுக்கொண்டு நாம் எந்தவொரு தருணத்திலும் கோரிக்கை விடுக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**



அத்துடன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இட்டுக்கட்டப்பட்ட கதைகளைக் கூறி பொய்யான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் ஊடகமொன்றிற்கு மேலும் தெரிவிக்கையில், 13 ஆவது திருத்தச் சட்டத்தினை தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கான தீர்வாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் கூறியது கிடையாது. தமிழர் விடுதலைக் கூட்டணியாக இருந்தாலும் சரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தாலும் சரி, தமிழரசுக்கட்சியாக இருந்தாலும் சரி இந்த நிலைப்பாட்டில் மாற்றங்கள் காணப்பட்டிருக்கவில்லை.

இந்தப் பின்னணியில் தற்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய ஆவணத்திலும் அவ்விடயங்கள் மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது. குறித்த ஆவணத்தில் கையொப்பமிட்ட தலைவர்களும் மிகத் தெளிவாக அந்த விடயத்தினை கூறியுள்ளனர்.

இருப்பினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் குறித்த ஆவணத்தினை திரிவுபடுத்தி இட்டுக்கட்டப்பட்ட விடயங்களை வெளிப்படுத்தி பொய்யான பிரசாரத்தினை முன்னெடுத்து வருகிறார்கள்.

எம்மைப் பொறுத்த வரையில், பிரிக்க முடியாத, பிளவுபடுத்த முடியாத ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வரும் இணைந்த வடக்கு-கிழக்கில், தங்களைத் தாங்களே ஆட்சி செய்யக் கூடிய வகையிலும் தங்களின் தலைவிதியை தீர்மானிக்கக்கூடிய வகையிலும் மீளப்பெற முடியாத அதிகாரப்பகிர்வு செய்யப்பட்டு சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டித் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். அதுவே தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதாக இருக்கும்.

ஆனால், 13 ஆவது திருத்தச்சட்டமானது, தற்போதைய அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். அத்திருத்தச்சட்டமானது அதிகாரப்பகிர்வின் ஒருவடிவமாக அரசியல் அமைப்பில் காணப்படுகின்றது. ஆகவே அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் மாறிமாறி இருந்த தலைவர்கள் அனைவரும் 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்றே வாக்குறுதிகளை வழங்கியுள்ளார்கள். பிரேமதாஸவின் காலத்தில் மங்கள முனசிங்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

சந்திரிகாவின் காலத்தில் பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தலைப்பில் தீர்வுப்பொதி தயாரிக்கப்பட்டது. பின்னர் ரணில் விக்கிரமசிங்க காலத்தில் ஒஸ்லோ பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. மகிந்த ராஜபக்ஷவால் 13 பிளஸ் என்று குறிப்பிட்டதோடு சர்வகட்சி அறிக்கையும் தயாரிக்கப்பட்டது.

அதன் பின்னர் மைத்திரி-ரணில் கூட்டாட்சியில் புதிய அரசியலமைப்புக்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. ஈற்றில் கோட்டாபய கூட அரசியல் தீர்வு பற்றி இந்தியப் பிரதமருக்கு வாக்குறுதி அளித்துள்ளார். இவ்வாறான பின்னணியில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதையே நாம் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றோம்.

விசேடமாக இந்தியா, தமிழர்களின் விடயத்துடன் நீண்டகாலமாக தொடர்புபட்டுள்ளது என்ற அடிப்படையில் அவர்களுக்குள்ள தார்மீக கடமையை முன்னெடுக்குமாறு நாம் கோரியுள்ளோம். நாம் எமது மக்கள் வழங்கிய ஆணையை மீறாது சரியான திசையில் பயணிக்கின்றோம். இதனை சில தரப்புக்கள் அரசியலுக்காக குழப்புவதற்கு முனைகின்றன என அவர் தெரிவித்தார். (நி)

# புதிய அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தம் நீக்கம்?

## கசிந்தது தகவல்

(கொழும்பு)

இலங்கையின் உத்தேச புதிய அரசியலமைப்பில் மாகாண சபை முறைமை முழுமையாக நீக்கப்பட்டுள்ளதாக அரச தரப்பை மேற்கோள் காட்டி தகவல் வெளிவந்துள்ளது.

13ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை முழுமையாக நீக்கப்படுவதோடு, தற்போது பணியாற்றும் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் தற்போது பணியாற்றும் துறையின், மத்திய அரச நிர்வாகத்தின் கீழ் மாற்றப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான நகல் வடிவைத் தயாரிப்பதற்கு 14 பேர் அடங்கிய நிபுணர் குழு ஒன்றை அரசாங்கம் நியமித்திருந்தது.

குறித்த நிபுணர் குழு நீண்டகால கலந்தாய்வுகளின் பின்னர் நகல் படிவம் ஒன்றை அரச தலைவரிடம் கையளித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அந்த நகல் வடிவத்திலேயே மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிரும் மாகாண சபை முறைமை முழுமையாக நீக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. (நி)

# யாழ்.சர்வதேச விமான நிலையம் விரைவில் திறக்கப்படும்

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் நாட்டில் ஏற்பட்ட கொரோனா நிலை காரணமாகவே மூடப்பட்டுள்ளதே தவிர வேறெந்த அரசியல் நோக்கங்களுக்காகவோ மூடப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.



நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்ட கொரோனா சூழ்நிலை காரணமாக இலங்கையில் உள்ள அனைத்து விமான நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையமும் மூடப்பட்டிருந்தது. அதே போல தற்பொழுது ஏனைய சில விமான நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. அதே போல யாழ்.சர்வதேச விமான நிலையம் திறக்கப்படும்.

தற்போது விமான நிலையத்தில் சில திருத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ளது. குறிப்பாக ஓடுபாதை விரிவுபடுத்த வேண்டி உள்ளது. மேலும் பல விமான சேவைகளுக்கான அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் காரணமாக சற்று தாமத நிலை காணப்படுகிறது.

எனினும் அந்த வேலைகள் முடிந்த பின்னர் விரைவாக விமான நிலையம் திறக்கப்படும் என அவர் தெரிவித்தார். (4-5-33-104)

# பரீட்சை முறைமைகள்-பல்கலைக்கழக நுழைவு என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்த யோசனை

## கல்வி அமைச்சு அவதானம்

(கொழும்பு)

கல்விப் பொது தராதர சாதாரணதரப் பரீட்சையை நிறைவு செய்த மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்கு செல்லும் காலம் மற்றும் உயர்தரப் பரீட்சையை நிறைவு செய்து பல்கலைக் கழகம் செல்வதற்கான காலம் என்பவற்றை குறைப்பது தொடர்பில் கல்வி அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் முன்னெடுக்கப்படுவதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அத்துடன் பரீட்சை பெறுபேறுகளை விரைவில் வெளியிடுவது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதவிர, பரீட்சைக்கால அளவை மாற்றுவதோடு பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. ஓபன் டென்னிஸ் ஆஷ்லே பார்டி சம்பியன்



அவுஸ்ரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் ஆஷ்லே பார்டி வெற்றிபெற்று மகுடம் சூட்டியுள்ளார்.

44 ஆண்டுகளுக்குப் பின்னர் குறித்த தொடரில் பட்டத்தை வென்ற முதல் அவுஸ்திரேலிய வீராங்கனை என்ற பெயரையும் ஆஷ்லே பார்டி வென்றுள்ளார்.

மெல்போர்னில் நடைபெற்றுவரும் ஆண்டின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற குறித்த தொடரின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டி நேற்று இடம்பெற்றது.

இதில் அமெரிக்க வீராங்கனையான டேனியல் காலின்ஸை எதிர்கொண்ட ஆஷ்லே பார்டி போட்டியின் முதல் செட்டை 6-3 என கைப்பற்றினார்.

இதனை அடுத்து விறுவிறுப்பாக இடம்பெற்ற இரண்டாவது செட்டை பிரெக்வரை நீடிக்க அதனையும் போராடி ஆஷ்லே பார்டி 7-6 என கைப்பற்றினார்.

முதல் முறையாக கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற டேனியல் காலின்ஸை 6-3, 7-6 என்ற கணக்கில் தோற்கடித்து மூன்றாவது பட்டத்தை வென்றார். (4-6)

# பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அணிக்கு யாழிலிருந்து ஆறு வீராங்கனைகள்



இலங்கை பல்கலைக்கழக தேசிய கூடைப்பந்தாட்ட அணிக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து 6 வீர, வீராங்கனைகள், முகாமையாளர்கள் மற்றும் பயிற்றுநர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


இதில் இலங்கை பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட தேசிய ஆண்கள் அணியில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தெ.வேணுயன், யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அ.சுஜீவன், களனி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சு.துவாரகன் ஆகியோருடன் இலங்கை பல்கலைக்கழக தேசிய ஆண்கள் அணியின் முகாமையாளராக யாழ்.பல்கலைக்கழக போதனாசிரியர் இ.அருளம்பலம், இலங்கை பல்கலைக்கழக தேசிய பெண்கள் அணியின் யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொ.கீர்த்தனா, க.துஷ்யந்தினி, கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பு.சானுஜா, அ.தர்சிகா ஆகியோருடன் இலங்கை பல்கலைக்கழக தேசிய பெண்கள் அணியின் முகாமையாளராக யாழ்.பல்கலைக்கழக போதனாசிரியர் திருமதி.ஜெ.சரவணபவ ஐயர் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 53 ஆவது சிரேஷ்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இவ்வீரர்கள் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2499

### சதுசி

கிச்சனுக்குள்ள போயிட்டு திருட்டுத்தனமா ஹார்லிக்ஸை தின்னுட்டு வந்தா மட்டும் போதாது டப்பாவை கரெக்டா மூடி வைச்சிட்டு வரனுமா




இல்ல நல்லா வாயை துடைச்சுக்கிட்டு வரனும்

### சபேஸ்

ஏன்டா? ஸ்கூல் கு இவ்வளவு லேட்டா வர்ற



சார், வேகமாத்தான் வந்தேன்.வர்ற வழில போர்டுல எழுதி இருந்திச்சு ஸ்கூல் அருகில் உள்ளது மெதுவாக செல்லவும் என்று அதான் பொறுமையா வந்தேன்

### விதுஷா

யார் காலையும் பிடித்ததில்லை என்று பெருமை பேச வேண்டியது




எனது கால் என்றால் மட்டும் நாக்கைத் தொங்க விட்டு ஓடி வருவது.. லகுடபாண்டிகளா

### நிதுசன்

நம்ம ஆபிஸ் ஒரு குடும்பம்மாதிரின்னு சொன்னேன் உண்மைதான்... அதுக்காக அன்புள்ள மாமா வுக்குன்னெல்லாம் எழுதி லீவு கேட்கக் கூடாது...புரியுதா?




### விநேஸ்

காதலர் தினம் வேற வருது லவ் பண்ணலாம்னு ரொம்ப ஆசையா இருக்கு ஆனா பொண்டாட்டிய நினைச்சா தான் ரொம்ப பயமா இருக்குதே



### கயலவன்

மனைவியை எந்தளவிற்கு நேசிக்கனும்னா? நாம நேசிக்கிறத பார்த்து மாமியார் சின்ன பொண்ணையும் நீங்களே கட்டிக்கீங்க மாப்பிளன்னு சொல்ற அளவுக்கு



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுனாமியாக பரவவுள்ள ஒமிக்ரோன் மாறுபாடு

## கொழும்பு தேசிய மருத்துவமனை எச்சரிக்கை

(கொழும்பு)

கொவிட் தொற்றானது சில நாட்களுக்கு முன்னரே சமூகமயப்படுத்தப்பட்டு தற்போது சுனாமியாக பரவி வருவதாக கொழும்பு தேசிய மருத்துவமனையின் மருத்துவர் உபுல் திஸாநாயக்க தெரிவித்தார்.

பரவி வரும் ஒமிக்ரோன் மாறுபாடு சில வழிகளில் சென்று பின்வாங்கும் என்று நம்பப்படுகிறது. ஆனால் இது எப்படி நடக்கிறது என்பதை பார்க்க நாங்கள் காத்திருக்க நேரிட்டுள்ளதென அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற போதிலும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்றவர்களில் அதிகமானவர்கள் தொற்றா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். ஒமிக்ரோன் வைரஸ் தற்போது பெரும்பாலும் அறிகுறியற்றதாக இருப்பதால், வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் பரிசோதனை செய்து கொள்ளாமல் சமூகம் முழுவதும் நோயை பரப்புவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# 1ம் ஆண்டு நினைவுகளுடன்...

மலர்வு 1964.04.26 உதிர்வு 2021.02.10

அமரர்.

**தவமலர் (சித்திரா) தர்மசேகரம்**

திதி– சதுர்த்தசி 31.01.2022



காலனின் சதியில் சிக்குண்டு
காணாமல் போய் விட்டீரே
கட்டாயம் எம்முடன் வாழ்கின்றீர்
என அதிர்வில் அலைகளில்
உணர்கின்றோம்
ஆண்டு ஒன்று கடந்தது
என எண்ணும் போது உன் முகம்
எம் முன் தோன்றுகிறது
வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து
எம்மை விட்டு பிரிந்த எம் குலவிளக்கே
உன் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல
இறைவனை பிரார்த்திக்கிறோம்.

(சி–3673)

பெரிய நாவலடி,
கொடிகாமம்.

தகவல்: கு.சத்திரன்.
077 408 0786

# கண்ணீர் அஞ்சலி



அமரர்.திருமதி.

**இராசம்மா பொன்னுச்சாமி**

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் அதிபர்
**திருமதி.ஜெயந்தி தனபாலசிங்கம்**
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி.இராசம்மா பொன்னுச்சாமி
அவர்கள் கடந்த 21.01.2022
அன்று காலமான செய்தியறிந்து
துயரமடைகின்றோம்.
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதுடன்
அன்னாரின் இழப்பால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி–3672)

பிரிவால் துயருறும் - கிளி.குமார்.

# இராசிபலன்

31.01.2022
தை 18, திங்கட்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 2.05.மணிவரை

உத்தராடம் முன்னிரவு 10.12 மணிவரை
சுபநேரம் - 12.36- 2.06 மணிவரை
இராகுகாலம் -8.06-9.36 மணிவரை

சந்திராஷ்டமம்- ரோகினி, மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழில் மேன்மையுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், அதிகம் செலவாகுமே என நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், இனத்தார் பகை மாறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** திடீர் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திருடர் பயமுண்டு.

**கடகம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், ஆதாயம் தரும் வேலை ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள்.

**கன்னி** பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், அரசு வழியில் அனுகூலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு கை கொடுத்து உதவுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பாராட்டும் புகழும் கூடும் நாள், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** தொழிலில் சில மாற்றங்களை செய்ய முற்படுவீர்கள், சிறிய வேலையொன்றிற்காக சற்று அலைய நேரிடலாம், அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**மீனம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் - வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவர் வீட்டை நீ உலுக்கினால் உன் வீடே உன் தலைமேல் விழும்

# நீர் வடிகால் அமைப்பை சீர்செய்த பின்னர் வீதியை புனரமைக்கவும்

## பொதுமக்கள் கோரிக்கை

(கரணவாய்)

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி வீதியில் நீர்வடிகால் அமைப்பை செய்த பின்னரே வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி வீதியில் வீதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அண்மையில் பெய்து வரும் மழை வெள்ளம் இவ்வீதியூடாகவே செல்கின்றது. இதனால் கரவெட்டி இராஜ கிராமம், மத்தெணி உட்பட பல கிராம மக்களின் வீட்டிற்குள் வெள்ள நீர் புகுகின்றது. இவ் வீதியில் முறையான நீர் வடிகால் அமைக்காமையே காரணம் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது வீதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நீர் வடிகால் பிரிவினர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், குறித்த பிரிவினர்கள் தமக்கு பொறுப்பல்ல என தட்டிக் கழிக்கின்றனர். முறையாக நீர் வடிகால் அமைப்பு செய்யாமல் வீதியை உயர்த்துவதால் மழை காலங்களில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாய நிலை உள்ளது.

வெள்ள நிவாரணங்கள் தருவதை தவிர்த்து, நீர் வடிகாலை முறையாக அமைத்து வீதியை புனரமைப்பதற்கு கரவெட்டி பிரதேச செயலாளர் மற்றும் கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் ஆகியோரை நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-5-60)



தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை 13 ஆம் திருத்தச் சட்டத்தினுள் முடக்கும் சதிமுயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஞாயிற்றுக்கிழமை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நல்லூரில் மாபெரும் பேரணி நடைபெற்றது. (படங்கள் - ரவிசாந், சிவசாந்தன், கஜிந்தன்)

# இன்று 'கறுப்பு ஜனவரி' கவனயீர்ப்பு போராட்டம்

(அராலி)

ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டமை, தாக்கப்பட்டமை மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுத்து, நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தி இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். நகரில் இன்று 'கறுப்பு ஜனவரி' என்னும் தொனிப்பொருளில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்துடன், இது தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களின் ஒத்துழைப்பையும் பெறும் நோக்கில் துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்படவுள்ளது.

சுதந்திர ஊடக இயக்கம், ஊடகத்துறை ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியவற்றின் பங்கேற்புடன் இப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (4-5-104)

# இந்திய இழுவை படகுகளால் மீனவர்களின் வலைகள் நாசம்

(அராலி)

சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்றொழிற்சங்க மீனவர்களது வலைகள் இந்தியன் இழுவைப்படகுகளால் சிக்குண்டு நாசமாகியுள்ளன. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த 28 ஆம் திகதி இரவு நான்கு படகுகளில் மீனவர்கள் தொழிலுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் இந்தியன் இழுவைப் படகுகள் இலங்கை எல்லைக்குள் அத்துமீறி உள்நுழைந்து அவர்களில் சிலரது வலைகளை சேதமாக்கின.

இதன்போது விரைந்து செயற்பட்ட அவர்கள் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக கையில் அகப்பட்ட வலைகளை எடுத்துக்கொண்டு கரைக்கு திரும்பினர்.

அண்மைக்காலமாக இந்தியன் இழுவை படகுகளுக்கு எதிராக வடக்கில் பல்வேறு இடங்களிலும், மீனவர்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5-104)



வடக்கு-கிழக்கு ஒப்பனையாளர் உதவும் கரங்களினால் ஜே/368 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் உ.சாதுஜனுக்கு துவிச் சக்கர வண்டி நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.

(படம்- மகாலிங்கம்)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1998 இந்து நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: சூரி 12 செவ் 11 இல் உயரம்: 6'<br>தகைமை/தொழில்: O/L ஐயர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் சைவ போசனம் இருந்தால் வேறு இனத்தவரும் ஏற்றுக்கொள்ளப்படும்.<br>தொ.இ: B/12229 | பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா:- 54 சூரி 12 செவ் 8 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: BA<br>எதிர்பார்ப்பு: தகுந்த அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/12324 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம் உத்திரட்டாதி 1<br>கி.பா: 63 ¼ சூரி 3 செவ் 1 இல்<br>உயரம் :5'7"<br>தகைமை/தொழில்: software Engineer<br>எதிர்பார்ப்பு: சைவ போசனம் மட்டும்<br>தொ.இ: B/12230 | பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்:ஆயிலியம் 2<br>கி.பா:43 ½ சூரி 10 செவ் 2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BBA management இறுதி ஆண்டு<br>எதிர்பார்ப்பு: உள்நாடு ஆயின் உத்தியோகம் அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/12325 |
| பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா:- சூரி 12 செவ் 1 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் BSc (Hons) Mechanical<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/12231 | பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்:ரேவதி 3<br>கி.பா: சூரி, செவ் 1<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:கற்பித்தலில் டிப்ளோமா ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி யாழ்ப்பாணம் (அரச, தனியார் உத்தியோகம்)<br>தொ.இ:G/12327 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: சூரி 9 செவ் 6 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: லண்டன்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்துப் பெற்றவர், விவகரத்து பெற்றவர் ஏற்கப்படும். லண்டனில் அல்லது வேறு நாட்டில் வசிக்கும் பெண் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/12232 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 63 சூரி 8 செவ் 7<br>உயரம்: 149 cm<br>தகைமை/தொழில்: Diploma in Education BA PGDE ஆசிரியை<br>எதிர்பார்ப்பு அரச உத்தியோகம்<br>தொ.இ:G/12329 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நாவற்குழி ஐயனார் கோவிலடிப் பகுதியில் வைத்து கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேக நபரிடம் இருந்து ஆயிரத்து 250மில்லிக்கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டிருப்பதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (4-5-30)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவிலில் அபிராமி பட்டர் குருபூஜையை முன்னிட்டு நாளை முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு "அபிராமி என்னும் அருமருந்து" என்னும் விடயப் பொருளில் சைவப் புலவர் செ.த.குமரனின் சொற்பொழிவு இடம்பெறும். (4-5)



அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மற்றும் இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ். போதனா மருத்துவமனை முன்றலில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலை அமைந்துள்ள இடத்தில் மகாத்மா காந்தியின் 74 ஆவது சிரார்த்த திதி நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனால் காந்தியம் பத்திரிகை வெளியிடப்பட்டது. (படம்- கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்கள் பட்டினியில் கிடக்க வெளிநாட்டுக் கடன் செலுத்தி பயன் என்ன?

## சுமந்திரன் எம்.பி.அரசிடம் கேள்வி

**(கொழும்பு) இலங்கை முன்னொரு போதும் கண்டிராத பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது. இதன் தாக்கமானது விசேடமாக தொழில் வர்க்கத்தினரையும் வறுமையில் உள்ளவர்களையும் மற்றும் அனைத்து சமூக வர்க்கத்தினையும் பாதித்துள்ளது. சந்தேகத்திற்கிடமின்றி அரசாங்கமானது ஒரு பாரிய சவாலை எதிர்நோக்கியுள்ளது. ஒரு நாட்டு மக்களாக இந்த சவாலினை மேற்கொள்வதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டிய ஒரு தேவையுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

இந்தச் சூழ்நிலையை கருத்திற்கொண்டு இலங்கை மக்கள் தொடர்பில் எமக்கு இருக்கும் பொறுப்பினை உணர்ந்தவர்களாக இலங்கையிலுள்ள ஆறிற்கும் அதிகமான அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இந்த சூழ்நிலையினை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் குறித்து கடந்த 27 ஆம் திகதி கலந்தாலோசனை ஒன்று நடைபெற்றது. அது குறித்து கருத்துரைக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கமானது வெளிநாட்டு கடன்களை செலுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுப்பதானது எமது மக்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தேவையான டொலர் கையிருப்பை இல்லாமற் போகச் செய்கிறது எவ்விதத்திலாயினும் கடன் தவணைகளில் எவ்வித தாமதமும் ஏற்படுவதனை தவிர்க்கும் அரசாங்கத்தின் குறிக்கோளானது எமது மக்கள் உண்ணக் கூடிய சூழலில் இருக்கிறார்களா? என்கிற அடிப்படைக் கேள்வியை குறைத்து மதிப்பிடுவதாகவே அமைகிறது. ஏனெனில் இறுதியாக ஒரு நாட்டின் பெருமையானது கடன்களை மீள் செலுத்துவதில் மாத்திரம் தங்குவதில்லை மாறாக எந்தவொரு குடிமகனும் பசியோடு தூக்கத்திற்கு செல்லாமல் இருப்பதனை உறுதி செய்வதிலும் தங்கியுள்ளது.

நாட்டின் தரப்படுத்தலானது சர்வதேச கடன் சந்தையில் கறுப்புப் பட்டியலில் இடம்பெறுமளவிற்கு வீழ்ச்சி அடைந்துள்ளது. 2020 ஏப்ரல் மாதத்திலிருந்து பிணைமுறியை வைத்து சர்வதேச சந்தையில் இலங்கை கடன் பெறுவது தடை செய்யப்பட்டுள்ளது. இந்த பின்னணியில் அமெரிக்க டொலரில் கடன் மீள் செலுத்துவதானது பாவனைக்குட்படுத்தக் கூடிய டொலரின் கையிருப்பானது ஒரு மாதத்திற்கான இறக்குமதிக்கு கூட போதாததொன்றாக வீழ்ச்சி அடைந்துள்ளது. சுதந்திரத்திற்கு பின்னர் இடம்பெற்ற பாரிய வீழ்ச்சி இதுவாகும்.

அரசாங்கத்தின் வருமானத்திற்கெதிரான கடன் வட்டி வீதமானது 2020 இல் 70% ஆக இலங்கை வரலாற்றிலே மிக உச்சமாக பதிவு செய்யப்பட்டதுமல்லாமல் உலகத்திலே உச்சமான வீதங்களிலேயும் இடம்பெற்றது ஆகும்.

இலங்கை உள்நாட்டு உற்பத்திக்கு எதிராக பொது கடன் சுமையானது 120%மாக ஒரு பாரிய ஏற்றமாக காணப்பட்டது. இது கடந்த இரண்டு ஆண்டுகளில் 25% உயர்வாகும்.

இந்த ஒவ்வொரு நிலைமைகளும் தனித்தனியாக பாரிய பொருளாதார பிரச்சினைகளை எடுத்துக்காட்டும். இவை சேர்ந்து இடம்பெறுவதானது எமது எதிர்காலத்திற்கு குறுகிய மற்றும் நீண்டகால அச்சுறுத்தலினை ஏற்படுத்துகின்றது.

இந்த பின்னணியில் கடன் கொடுத்தவர்களிற்கு முழுமையாகவும் சரியான நேரத்திலும் கடனை செலுத்துவதற்கான டொலரை தேக்கி வைக்கும் கொள்கையை மத்திய வங்கி கடைப்பிடிக்கின்றது. இது எமது மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான டொலரின் பற்றாக்குறைக்கு மேலும் வலுச்சேர்ப்பதாகவும் உணவு. மருந்து மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதியை குறைத்துமுள்ளது. இந்தப் பற்றாக்குறையின் எதிரொலியினை அத்தியாவசிய பொருட்களிற்காக நீண்ட வரிசைகளிலும் தொடர் மின் துண்டிப்பிலும் நாம் கண்டோம். அரசாங்கமானது டொலர் கையிருப்பினை உறுதி செய்யும் வகையில் மாற்று வழிமுறைகளை கையாளவில்லை என்றால் இந்த நிலைமை மேலும் மோசமடையும்.

ஏற்கனவே அரசாங்கத்தின் இரசாயன உரக் கொள்கையின் நிமித்தம் விவசாயிகள் பாரிய பாதிப்பினை சந்தித்துள்ளதோடு ஒரு உணவு பற்றாக்குறைக்கும் நாம் முகங்கொடுக்க வேண்டிய சூழலை எதிர்நோக்கியுள்ளோம். அரசாங்கத்தின் ஆழ்ந்த சிந்தனையற்ற நடைமுறை சாத்தியமும் நிலையற்றதுமான தற்போதைய கடன் முகாமைத்துவ கொள்கையானது இரசாயன கொள்கை போன்று பிரச்சினையை மேலும் மும்முரமாக்குகிறது என அவர் தெரிவித்தார். (நி)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு.ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன்

**M.Ed, PGDEM, JP Principal (SLPS)**




யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றும் **திரு.ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன்** அவர்கள் கடந்த 25.01.2022 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணி (MEd) பட்டத்தைப் பெற்றுக் கொண்டமைக்காக அவர்களைப் பாராட்டுவதோடு மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்று வாழ்வில் சிறப்புற இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்.**

(9882)

# கேள்வி அறிவித்தல்

## சபைநிதி வேலைத்திட்டம் (Council) -2022

## கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி

1. தலைவர், பெறுகைக்குழு, கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி வடமாகாணம். கரைச்சி பிரதேச சபை சார்பாக தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்ற போதும் வடமாகாணத்திற்கு உட்பட்ட கேள்விதாரர்களிடம் இருந்து மாத்திரமே கேள்விகள் பெறப்படும் வகையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி IV இல் காட்டப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
5. மேலதிக தகவல்களை கரைச்சி பிரதேச சபை, A-9 வீதி, கிளிநொச்சி (தொலைபேசி : 021-228 5761, தொலைநகல் 021-228 5690) மின்னஞ்சல் kilinochchi1kps@gmail.com இல் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணத்தை கரைச்சி பிரதேச சபை, A-9 வீதி, கிளிநொச்சி எனும் இடத்தில் 01.02.2022 ஆம் திகதியிலிருந்து 14.02.2022 வரை காலை 09.30 மணிக்கும் பி.ப. 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1,000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வி ஆவணங்கள் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, A-9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு 15.02.2022 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகை குழுவிற்கு அதிகாரம் உண்டு.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 90 (தொண்ணூறு) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விகள் தொடர்பான இறுதித்தீர்மானம் பெறுகைக்குழுவினால் எடுக்கப்படும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/Council/KPS/KI/Street Light/KAPS/G-50w/2021 | வீதி விளக்குகளைக் கொள்வனவு செய்தல்-50w (Supplying single water proofstreet Lamp 50W) | 12.75mn | 01 மாதம் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 127,500.00 | 13.06.2022 |
| NP/Council/KPS/KI/Street Light/KAPS/G-100w/2021 | வீதி விளக்குகளைக் கொள்வனவு செய்தல் - 100w (Supplying single water proofstreet Lamp 100W) | 0.66mn | 01 மாதம் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 6,600.00 | 13.06.2022 |

11. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 10.02.2022 ஆம் திகதி பி.ப. 13.30 மணிக்கு, தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, A-9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளலாம்.


**தலைவர்**
**பெறுகைக் குழு**
**கரைச்சி பிரதேச சபை, A-9 வீதி,**
**கிளிநொச்சி, வடக்கு மாகாணம்.**

(C-3674)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# முப்படையினர் பாசறை திரும்பும் நிகழ்வில் 1000 ட்ரோன்கள் மூலம் கண்கவர் காட்சி



(டில்லி)

இந்தியாவில் தயாரித்த 1000 ட்ரோன்களை வைத்து கண்கவர் காட்சி நடத்தப்பட்டது. கடந்த புதன் கிழமை நடைபெற்ற 73 ஆவது குடியரசு தின விழாவில் பங்கேற்க வந்த முப்படை வீரர்கள் தங்கள் முகாம்களுக்கு திரும்பும் 'பாசறை திரும்புதல் நிகழ்ச்சி' நேற்று நடை பெற்றது.

டில்லியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கலாசாரம் பற்றிய லேசர் ஒளிக் காட்சிகள் நடைபெற்றன. சூரிய அஸ்தமன நேரத்தில் ட்ரோன் கண்காட்சியும் இடம்பிடித்தது.

இதில் புதுமையான முறையில் மேக் இன் இந்தியா திட்டத்தின்படி, இந்தியாவில் தயாரித்த 1000 ட்ரோன்களின் காட்சி பார்வையாளர்களை கவர்ந்தது.

இந்திய நிலப்பரப்பு வடிவில் ட்ரோன்கள் காட்சியளித்தன. முதல் முறையாக இந்தியாவில் தயாரித்த 1000 ட்ரோன்களை வைத்து கண்கவர் காட்சி நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நாசி வழி பூஸ்டர் தடுப்பு மருந்தின் சோதனை இந்தியாவில் மேற்கொள்ள அனுமதி

(டில்லி)

பாரத் பயோடெக் நிறுவனத்தின் நாசி வழி பூஸ்டர் தடுப்பு மருந்தின் சோதனையை இந்தியாவில் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்திய மருந்து தர கட்டுப்பாட்டு ஆணையகத்தினால் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கோவெக்சின் அல்லது கோவிஷீல்ட் தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு பூஸ்டர் டோஸாக நாசி வழியாக செலுத்தும் மருந்தினை அளித்து சோதனையிட திட்டமிடப்பட்டுள்ளது.

சுமார் 5 ஆயிரம் பேரிடம் நடத்தப்படவுள்ள இந்த சோதனை, நாட்டின் 9 இடங்களில் நடத்தப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

2ஆவது டோஸ் தடுப்பூசிக்கும் நாசி வழியாக செலுத்தும் பூஸ்டர் டோஸிற்கும் இடையிலான இடைவெளி 6 மாதமாக நிர்ணயிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பரிசோதனைகளின் நிறைவில் மார்ச் மாதத்தில் இதனை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (நி-5)

# நியூஸிலாந்து பிரதமர் தனிமைப்படுத்தலில்

(வெலிங்டன்)

கெரிகேரியில் இருந்து ஒக்லாந்திற்கு சென்ற விமானத்தில் பணிப்பெண் ஒருவருக்கு ஒமிக்ரோன் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து, குறித்த விமானத்தில் பயணித்த நியூஸிலாந்து பிரதமர் ஜசிந்தா ஆர்டெர்ன் மற்றும் ஆளுநர் ஜெனரல் டேம் சிண்டி கிரோ இருவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.



ஆர்டெர்னின் தலைமை செய்தி செயலாளர் ஆண்ட்ரூ காம்ப்பெல் உட்பட விமானத்தில் இருந்த அனைவரும் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் தொற்றாளருடன் நெருங்கிய தொடர்பாளர்களாக கருதப்படுகிறார்கள்.

சுகாதார அமைச்சின் தேவைகளின்படி ஆர்டெர்ன் நேற்றுக் காலை பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொண்டதாக பிரதமரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

அந்த பரிசோதனை முடிவுகள் இன்று வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் ஆர்டெர்ன், தொற்று அறிகுறியற்றவராகவும் நன்றாக உள்ளதாகவும் செய்தித் தொடர்பாளர் மேலும் கூறியுள்ளார். (நி-5)

# கேரளாவில் அதிகரிக்கும் கொரோனா தொற்று அமுல்படுத்தப்பட்டது ஊரடங்கு


(டில்லி)

கேரளாவில் நாளாந்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 50 ஆயிரத்தைக் கடந்துவிட்ட நிலையில், அங்கு கடுமையான கட்டுப்பாடுகளுடன் கூடிய ஊரடங்கு நேற்று முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

காய்கறி, மருந்து, பால் போன்ற அத்தியாவசியமான பொருட்களை விற்கும் கடைகள் திறந்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவசர பணிகளுக்கு செல்வோர் வாகனங்களில் தக்க ஆதாரத்தை வைத்திருக்க வேண்டும் எனவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தேர்வுகளில் பங்கேற்பவர்களுக்காக தொலைதூரப் பேருந்துகளை இயக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. (நி-5)

அமை... அவ...
• 3500 வி...
• 1,17,000...
• ரயில் நிை...



# 5 வருடங்களின் பி...
# மிக நீண்டதூர ஏவுக... ஏவியது வடகொ...

(பியாங்யாங்)

2017 ஆம் ஆண்டுக்கு பின்னர் நீண்ட தூரம் பயணிக்கக்கூடிய கண்டம் விட்டு கண்டம் பாயும் (பாலிஸ்டிக்) ஏவுகணையை வட கொரியா நேற்று ஞாயிற்றுக் கிழமை ஏவியுள்ளது. இது வடகொரியாவின் ஆயுதத் திட்டத்தின் விரிவாக்கம் மற்றும் வரவிருக்கும் பெரிய சோதனைகளின் அறிகுறி என்று தென் கொரியா வின் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

தென் கொரிய மற்றும் ஜப்பானிய அரசாங்கங்கள் இரண்டும் குறித்த பாலிஸ்டிக் ஏவுகணை ஏவப்பட்டதை உறுதிப்படு... யானது கொரிய தீப... யில் உள்ள நீர்ப் ப... உயரம், 800 கிலே... டோக்கியோவில் உ... னர். இதேவேளை ... மாகாணத்தில் இருந்... காலை 7:52 மண... பட்டதாக தென்கொ... தலைவர்களும் தெரி...

# பீஜிங்கில் அதிகரிக்கும்... கட்டுப்பாடுகளை தீவி...

(பீஜிங்)

சீன தலைநகர் பீஜிங்கில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் தொடங்க இன்னும் சில நாட்கள் உள்ளன. அந்த மாநகரம் முழுவதும் உச்சக்கட்ட பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று சீனா முழுவதும் 54 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது. இதில் பீஜிங்கில் மட்டும் 20 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இது கடந்த 2020 ஜூன் மாதத்தில் இருந்து தற்போதைய வரையிலான அதிகபட்ச கொரோனா பாதிப்பு என சீன தேசிய சுகாதார ஆணையம் அறிவித்துள்ளது.

இதையடுத்து வீட்டு வளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...மரிக்காவில் பனிப்புயல்
# ...வசர நிலை பிரகடனம்!

### ...விமானங்கள் ரத்து
### ...வீடுகளுக்கு மின்சாரம் துண்டிப்பு
### ...நிலையங்கள் மூடல்





(நியூயோர்க்)

பனிப்புயல் அச்சுறுத்தலால் நேற்று ஒரே நாளில் அமெரிக்காவில் 3,500 இற்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரை நகரங்களில் பனிப் புயல் வீசி வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது. நியூயோர்க் மற்றும் அண்டை மாநிலமான நியூஜெர்சியில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட் டுள்ளது.

நியூயோர்க் நகரில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. 1,17,000 வீடுகளுக்கு மின்சாரம் இணைப்பு இல்லை. கடலோரப் பகுதிகளில் ஒரு அடி உயரம் பனிப்பொழிவு காணப்பட்டதால் போக்குவரத்து முற்றிலும் பாதிக் கப்பட்டுள்ளது. உறைபனியை அகற்றும் வாகனங்கள் சாலைகளில் செல்வதை பார்க்கலாம்.

பல பகுதிகளில் வாகனங்கள் பனிமூடி காணப்பட்டன. லாங் ஐலே ண்ட் பகுதியில் ஒரு பெண் பனியில் உறைந்த நிலையில் தனது காரில் இறந்து கிடந்தது கண்டறியப்பட்டுள்ளது.

நகரங்களில் வசிப்பவர்கள் வீட்டி லேயே இருக்குமாறும், தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறும் வலியுறுத்தப்பட்டது. மன்ஹாட்டனுக்கு வடக்கே தீவு பகுதியில் 25 சென்றிமீற்றர் அளவிற்கு உறைபனி குவிந்துள்ளது. ரயில் நிலையங்கள் மூடப்பட்ட நிலையில், தண்டவாளத்தில் இருந்து பனியை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பனிப்புயல் அச்சுறுத்தலால் நேற்று முன்தினம் ஒரே நாளில் 3,500 இற்கும் மேற்பட்ட விமா னங்கள் ரத்து செய்யப்பட்டன. (நி-5)

### ...யின்
### ...கணையை
### ...ரியா



...டுத்தியுள்ளன. இந்த ஏவுகணை ...தீபகற்பத்தின் கிழக்கு கடற்கரை ... பரப்பில் 2,000 கிலோமீற்றர் ...லோமீற்றர் தூரம் பயணித்ததாக ... உள்ள அதிகாரிகள் தெரிவித்த ... வட கொரியாவின் ஜகாங் ...ருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை ...ணிக்கு ஒரு ஏவுகணை ஏவப் ...கொரியாவின் கூட்டுப்படைத் ...தெரிவித்துள்ளனர். (நி-5)

### ...ம் கொரோனா தொற்று
### ...விரப்படுத்தியது சீனா


...கங்களை பூட்டுதல், எல்லைக் கட்டுப்பாடுகள் மற்றும் நீண்ட கால தனிமைப்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கை மேற்கொள் ளப்பட் டுள்ளது. 20 இலட்சம் பேருக்கு உடனடியாக கொரோனா பரி. சோதனைகள் நடைபெற்றன்.

மூடப்பட்ட அரங்குகளில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடத்தப்படும் நிலையில், அந்த பகுதி முழுவதும் கடந்த 4 ஆம் திகதி சீல் வைக்கப்பட்டு மற்ற பகுதியில் இருந்து துண்டிக்கப்பட் டுள்ளது.

மூடப்பட்ட விளையாட்டு அர ங்குகளுக்குள் இருக்கும் 60,000 பேர் தினசரி சோதனைக்கு உட் படுத்தப்படுகிறார்கள்.

பீஜிங் நகரம் முழுவதும் கொரோனா தொற்றே இல்லாத நிலையை ஏற்படுத்த தீவிர நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு வரு கின்றன. (நி-5)

## கலவர பூமியானது கனடா
# ஜஸ்டின் ட்ரூடோ தலைமறைவு



(ஒட்டாவா)

தடுப்பூசி உத்தரவுக்கு எதி ராக கனடாவில் போராட்டம் தீவிரமடைந்துள்ளதால் பிர தமர் ஜஸ்டின் ட்ரூடோ இர கசிய இடத்திற்கு அழைத் துச்செல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரி விக்கின்றன.

கனடாவில் கொரோனா தொற்றுப் பரவலை கருத்தில் கொண்டு பல்வேறு கட்டுப் பாடுகள் நடைமுறைப்படு த்தப்பட்டன.

இத்தகைய கொரோனா கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் மிகப் பெரிய அளவில் எதிர்ப்பு போராட்டத்தை நடத்தி வரு கின்றனர்.

இதனால், பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் அவரது குடும்பத்தினர் தமது வீட்டில் இருந்து வெளியேறி இரகசிய இடத்திற்கு அழை த்துச்செல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின் றன.

கடும் குளிர் நிலவி வரும் சூழலிலும் பாராளுமன்ற வளாகத்திற்குள் நூற்றுக் கணக்கான போராட்டக்கார கள் ஊடுருவியுள்ளதால், வன்முறைக்கான அபாய மும் அங்கு ஏற்பட்டுள் ளது.

குறித்த பகுதியில் பொலி ஸார் குவிக்கப்பட்டுள்ள துடன், பாதுகாப்பும் பல மட ங்கு அதிகரிக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகி றது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள்
# விரைவில் வெளியிடப்படும்
### பரீட்சைகள் திணைக்களம்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு மாதம் அல்லது 10 நாட்களுக்குள் முடிவுகள் வெளியாகும் என எதிர்பார்க்கப் படுவதாக பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்தார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பாகிஸ்தானிடம் இருந்து அரிசி, சீமெந்து பெற இலங்கை முயற்சி

(கொழும்பு)

கடன் திட்ட அடிப்படையில் பாகிஸ்தானிடம் இருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான அரிசி மற்றும் சீமெந்தை இறக்குமதி செய்ய இலங்கை முயற்சிக்கிறது.

இதற்கான பேச்சுக்கள் இடம்பெறுவதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கை அரச வர்த்தக் கூட்டுத்தாபனம், விரைவில் வர்த்தக அமைச்சுக்கு உடன்படிக்கை வரைபு ஒன்றை சமர்ப்பிக்கும். இந்த வருடத்துக்குள் பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு சீமெந்து, பாஸ்மதி அரிசி என்பன இறக்குமதி செய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை பாகிஸ்தானிய பிரதமர் இம்ரான்கானுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது, தற்போது பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் பெறுமதியை 500 மில்லியன் டொலர்களில் இருந்து 2 பில்லியன் டொலர்களாக உயர்த்தும் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-5)

# செய்தித்துளிகள்

## வெளிநாட்டு நாணயங்களை கடத்த முயன்ற ஐவர் கைது

(கொழும்பு)

டுபாய்க்கு 25 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டு நாணயங்களை கடத்த முயன்ற 5 சந்தேக நபர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கப் பேச்சாளர் தெரிவித்தார். (நி-5)

## 359 புறாக்களுடன் இருவர் கைது



(புத்தளம்)

தப்போவ சரணாலயத்தில் விடுவிக்க கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 359 புறாக்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கருவலகஸ்வெவ தப்போவ சரணாலயத்தில் நேற்று அதிகாலை 3.45 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின்போதே இந்த கைது இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் அக்குரணை, கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட புறாக்கள் கருவலகஸ்வெவ கல்லூரி மைதானத்தில் பறக்கவிடப்பட்டதுடன், சந்தேகநபர்கள் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டு நாளை முதலாம் திகதி புத்தளம் நீதவான் நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## சூரிய நாராயண பூஜை



### பூஜை மகிமை

ஒவ்வொரு பூஜைக்கு முன்னரும், விக்னேஸ்வர பூஜை செய்வது அவசியம். புது மஞ்சளை அரைத்து அதனை பிள்ளையாராகப் பிடித்து வைக்க வேண்டும். மகர சங்கராந்தியின் சூரிய பூஜை மிக சிறப்பான பலனை தரும். ராமர் தினமும் காயத்ரி மந்திரம், ஆதித்ய ஹருத்ய ஸ்தோத்திரம் கூறி சூரியனை வழிபட்டார். அதன் பயனாக அவர் ராவணனை அழித்தார். பாண்டவர்கள் சூரிய வழிபாடு செய்து அட்சய பாத்திரத்தை பெற்றனர். சூரிய வழிபாடு அனைத்து செல்வங்களையும் வாரி வழங்கும்.

பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல். அன்று கோபூஜை செய்ய வேண்டும். பசுவை வணங்குவது பெரும் புண்ணியத்தை தரும். 'எல்லா உப நிஷத்துக்களும் பசுக்கள்' என்று கீதையில் கண்ணன் கூறுகிறார்.

பசுவின் உடலில் மும்மூர்த்திகளும், இதர தெய்வங்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்து எண்ணாயிரம் ரிஷிகளும், அஷ்ட வசுக்களும் ஆட்சி செய்வதாக, வேதநூல்கள் தெரிவிக்கின்றன. பசுவை பெற்ற தாய்க்கு இணையாக பசுத்தாய் என்றும் கோமாதா என்றும் அழைத்து மகிழ்கிறோம். பசுவின் பாலினாலும், நெய்யினாலும் யாகங்கள் செய்யப்படுகின்றன. இதனால் மழை பெய்கிறது. பசுவின் பின்புறத்தில் மகாலட்சுமி வாசம் செய்வதாக ஐதீகம். கோமாதா பூஜை செய்யும் போது பசுவை முன்புறமாக, தரிசிப்பதை விட பின்புறம் தரிசிப்பது மிகவும் நன்மை தரும். பசுவை வணங்கும் போது முன் நெற்றி மற்றும் வால்ப் பகுதியில் சந்தனம், குங்குமம் வைத்து மலர் அணிவித்து வழிபட வேண்டும். பசுவின் சாணமும், லட்சுமி அம்சமாகும். எனவே தான் அதிகாலையில் சாணத்தை வீட்டு வாசலில் தெளிக்கிறார்கள். பசுவுக்கு பூஜை செய்வது பராசக்திக்கு பூஜை செய்வதற்கு சமமாகும்.

கோமாதா பூஜையின் போது முதலில் பசுவை அழைத்து வந்து அதன் மீது பன்னீர் தெளிக்க வேண்டும். பின்னர் பசுவின் நெற்றியில் மஞ்சள், குங்குமம், பொட்டு வைக்க வேண்டும். பசுவின் கழுத்தில் மாலை அணிவித்து, புடைவை ரவிக்கை சாத்தி, அகத்திக்கீரை, சர்க்கரைப் பொங்கல், பழவகைகள் போன்றவற்றை ஆகாரமாகத்தர வேண்டும். நெய் விளக்கில் பசுவிற்கு ஆரத்தி எடுத்து விட்டு விழுந்து வணங்க வேண்டும். கோமாதா 108 போற்றியை பக்தியுடன் சொல்ல வேண்டும்.

(தொடரும்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 180 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 450 |
| தக்காளி | 140 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 80 | 50 |
| கோவா | 180 | 230 | 250 |
| கரட் | 420 | 430 | 450 |
| பூசணி | 150 | 140 | 160 |
| புடோல் | 200 | 180 | 280 |
| வாழைக்காய் | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 200 |
| பாகற்காய் | 250 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 170 | 280 |
| கருணைக் கிழங்கு | 90 | 120 | 150 |
| பயற்றங்காய் | 450 | 450 | 400 |
| லீக்ஸ் | 220 | 230 | 280 |
| பீற்றூட் | 300 | 280 | 400 |
| கறிமிளகாய் | 450 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | -- |
| போஞ்சி | 350 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 170 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 150 | 130 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 85 | 40-90 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 220 | 250 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | 80 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்புறக்கணிப்புக்களை தடை செய்யும்

# நீதி அமைச்சரின் கருத்துக்கு தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார மையப் புள்ளிகளில் உள்ள தொழிலாளர்களுக்கான தொழிற்சங்க நடவடிக்கையை கட்டுப்படுத்துவது குறித்து நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்த கருத்துக்கு பல தொழிற் சங்கங்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

துறைமுகங்கள், சுங்கம், நீர் வழங்கல், மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் போன்றவற்றால் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கையை கட்டுப்படுத்த அரசியலமைப்புச் சட்டத்திற்கமைய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இந்த நிலையில், இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதா? என பெற்றோலிய தொழிற்சங்க சம்மேளனத்தின் அழைப்பாளர் ஆனந்த பாலித உட்பட பல துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்க பிரதிநிதிகள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாக தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தொழில் அமைச்சர் மௌனம் காக்கக் கூடாது என கோரிய பாலித, துறைமுகங்கள், எண்ணெய், மின்சாரம், நீர், உள்நாட்டு வருவாய் திணைக்களங்கள் விற்பனைக்கு வைக்கப்படும்போது அல்லது வெளிநாட்டுக்கு வழங்கப்படுகையில் தொழிற்சங்க நடவடிக்கையானது எதிர்ப்பு தெரிவிக்கும் வழிமுறையாகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இதனை பிரதமர் நிராகரிக்க வேண்டும் எனவும், மனித உரிமைகளைப் பாதுகாப்பேன் என தனது உரையில் கூறிய ஜனாதிபதியை மேற்கோள் காட்டி இந்த அறிக்கையை வெறுமனே அனுமதிக்கக் கூடாது எனவும் பாலித தெரிவித்தார்.

இது உடனடியாக திரும்பப் பெறப்பட வேண்டும் என்றும் மேலும் இது அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீதி அமைச்சர் பதவி விலகாவிட்டால், அரசாங்கம் அவரை பதவியில் இருந்து நீக்கி, சர்வதேச உடன்படிக்கையின் தரத்தை நிலைநிறுத்துவதாக ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நீதி அமைச்சரின் கருத்திற்கு இலங்கை ஆசிரியர் சங்கத்தினர், துறைமுக இலவச ஊழியர் சங்கத்தினர், சித்த மருத்துவ வல்லுநர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். (நி)

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு

## நிதி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

லண்டனில் உள்ள பைனான்சியல் டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு இவ்வருடம் 6.9 பில்லியன் டொலர் கடனைச் செலுத்துவது மிகவும் கடினமானது எனவும், மருந்துகள், மூலப்பொருட்கள், எரிபொருள் உட்பட அனைத்திற்கும் பணத்தைத் தேட வேண்டியுள்ளதாகவும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனை பெறுவதற்கு இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கதவு உடைந்து விழுந்து சிறுமி பலி

(கொழும்பு)

ஆசிரியரின் வீட்டுக்குச் சென்ற போது நுழைவாயில் கதவு உடைந்து விழுந்து சிறுமியொருவர் உயிரிழந்த சம்பவம் தம்புத்தேகம பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் காலை தம்புத்தேகம பொலிஸ் பிரிவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நுழைவாயில் கதவு விழுந்து படுகாயமடைந்த சிறுமி தம்புத்தேகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்த சிறுமி 6 வயதுடைய முலஸ்பிடிய பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். தம்புத்தேகம பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5)

## எரிபொருள் தட்டுப்பாடு

# தேவையற்ற பயணங்களை தவிர்க்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

தேவையற்ற வாகன பயணங்களை தவிர்க்குமாறு அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது நாட்டில் நிலவி வரும் எரிபொருள் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக அமையும் எனவும் அத்துடன் மிகவும் அத்தியாவசியமான நேரத்தில் மட்டும் நாம் மின்சாரத்தை பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)



# இன்று ஒரு தகவல்

## குறைகாணும் கொடுங்குணம்

மற்றவர்களின் செயல்களில் குறை காணுவதையே தமது முழுநேரத் தொழிலாகக் கொண்டு வாழ்பவர்கள் அநேகம் பேர்.

இவர்கள் மற்றவர்கள் செய்யும் குற்றங்களைப் பொறுக்க இயலாதவர்களாகி மனத்தளவில் வெகுவாகப் பாதிக்கப்பட்டு சகஜ நிலையை இழந்து சங்கடப்படுவதுண்டு.

இதையே சாக்காகக் கொண்டு தவறு புரிந்தவர்களை மன்னிக்கும் மனப்பான்மை சிறிதும் இன்றி அவர்களைக் கத்தரித்து விடுவதிலோ தண்டிப்பதிலோ குறியாக இருப்பார்கள்.

இந்நிலை தொடர்ந்தால் அவர்கள் பொட்டல் நிலத்தின் பட்டுப்போன செடிகள் போல் ஆகி எவருடைய அன்பையும் பெற இயலாமல் போய் விடும்.

மனிதர்கள் குறைபாடு உடையவர்கள். இதற்கு விதிவிலக்காக விரல்விட்டு எண்ணக்கூடிய நபர்கள் கூட உலகில் இருக்க முடியாது.

குறை என்பது கோலிக் குண்டு மாதிரி, தள்ளி வைத்துப் பார்த்தால் சிறியதுதான். அதையே கண்ணருகே வைத்துப் பார்த்தால் உலகையே மறைக்கும் அளவுக்குப் பெரிதாகத்தான் தோன்றும்.

ஆக, உரியவற்றை உரிய இடத்தில் வைத்துப் பார்ப்பது தான் முறை. வலிய ஒரு குற்றத்தைக் கண்டு பிடித்து, அவர்கள் மீது வருத்தத்தை ஏற்படுத்திக் கொண்டு அவர்களிடமிருந்து விலகிச் செல்லுதல் முறையல்ல.

குறையுள்ள நண்பனைப் பொறுக்கமாட்டாமல் கத்தரித்து விடலாம். பணியாளர்களைக் காரணம் கூறி அனுப்பி விடலாம்.

ஆனால் கூடப் பிறந்த ஒருவரை என்ன செய்ய முடியும்? வாழ்நாள் முழுவதும் கூடவே வாழப் போகும் மனைவியை என்ன செய்ய முடியும்? வாரிசை என்ன செய்ய முடியும்?

இங்கேதான் குறைகாணும் கொடுஞ் செயலைக் கைவிட வேண்டிய அவசியம் வருகிறது.

அனைவராலும் குற்றம் என ஒப்புக் கொள்ளப்படும் ஒரு குற்றத்தைக்கூட மன்னிக்கும் மனப்பான்மை வேண்டும் என்கிறபோது வலியச் சென்று ஒரு குற்றத்தைக் கண்டு பிடிப்பதும் அதன் விளைவாக மற்றவர்களைப் புண்படுத்துவதும் நம்மை நாமே மனத்தளவில் துன்புறுத்திக் கொள்வதும் முறையான செயலாகுமா?

எந்த நிமிடமும் நம்முடைய எதிரியாகிவிடத் துடிக்கும் ஒருவரிடம் குற்றங்குறைகளைக் காண முயலும் செயலானது, பாம்புப் புற்றுக்குள் கையை விட்டுத் துழாவுவது போன்றது. இதைவிட ஆபத்தான செயல் வேறு வேண்டுமா?

மாற்ற முடியாத மற்றவர்களின் மன இயல்புகளுக்கு ஏற்ப நம்மை நாம் மாற்றிக் கொள்ளாவிட்டால் மனக் கொந்தளிப்பு ஒன்றே மிஞ்சும்.

அதை உள்ளுக்குள் போட்டு வேக வைப்பதைக் காட்டிலும் வேறு வழியின்றிக் கண்டும் காணாததுமாய் சரி சரியென ஏற்றுக் கொள்வது, உடலுக்கும் உள்ளத்திற்கும் ஏற்றது.

அதற்காகக் குற்றங்களைச் சுட்டிக்காட்ட வேண்டாம் என்று பொருளல்ல. இச்செயல் நல்ல நோக்கத்துடனும் சகஜமான மனநிலையுடனும் செயற்பட்டால் அது ஓரளவு ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஒன்றே.

ரோஜாக் கிளையில் முள் இருக்கிறதே என்று குறை காண்பவர்கள் ஒரு வகையினர்.

ஒரு முட் செடிகூட அழகான ரோஜா மலரைத் தோற்றுவித்திருக்கிறதே என எண்ணுபவர்கள் இரண்டாம் வகையினர். நாம் இரண்டாம் வகையைச் சேர்ந்தவர்களாக இருக்கவே விரும்ப வேண்டும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைக்கு அடிமையானவர்களுக்காக மருதங்கேணியில் புனர்வாழ்வு நிலையம்

## நீதி அமைச்சர் அலிசப்ரி



(அராலி)

வடக்கில் போதைக்கு அடிமையானவர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் புனர்வாழ்வு அளிப்பதற்காக யாழ்ப்பாணம் மருதங்கேணியில் புனர்வாழ்வு நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நீதி அமைச்சின் கீழ் புனர்வாழ்வு ஆணையகம் செயற்படுகிறது. அந்த புனர் வாழ்வு ஆணையத்தின் கீழ் போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் ஒரு அங்கமாக வடபகுதியில் போதைக்கு அடிமையாகி போதைப் பொருள் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புபட்டு பலர் சிறைகளில் உள்ளனர்.

அவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக வடக்கில் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புனர் வாழ்வு நிலையம் ஒன்றை விரைவில் அமைக்க திட்டமிட்டுள்ளோம் எனத் தெரிவித்தார். (4-5-104)

# காலபோக அறுவடை மன்னாரிலும் ஆரம்பம்

## படு வீழ்ச்சியில் அறுவடை



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த வருட இறுதியில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கையின் அறுவடைகள் தற்போது ஆரம்பித்துள்ளன.

நாட்டில் இரசாயன உரம் தடை செய்யப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையின் அறுவடை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் நெல் அறுவடையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக 30-40 மூடை நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்களில் 15-20 மூட்டைகளே கிடைப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் களைநாசினிகள் தடை செய்யப்பட்ட நிலையில் நெற்செய்கையில் பெரும் பகுதியில் புற்கள் மற்றும் முட்புதர்கள் நிறைந்து காணப்படுவதும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மேலும் தனியார் நெற் கொள்வனவிற்கு இதுவரை நிர்ணய விலை நிர்ணயிக்கப்படாமையினால் நாளுக்கு நாள் நெல்லின் விலை குறைவடைவதாகவும் விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர். (4-5-285)

# கொவிட் கட்டுப்படுத்தலில் சமூகத்தின் பொறுப்பு மிக முக்கியம்

## கிளிநொச்சி அரச அதிபர்



(கண்டாவளை)

கொவிட் - 19 தொற்று நோயிலிருந்து எங்களைப் பாதுகாப்பதற்கு சுகாதாரப் பணியாளர்களது கடமை மட்டுமல்லாது சமூகத்தின் கடமையும் மிக முக்கியமானதாக உள்ளது என மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நாட்டில் கொவிட் தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முதலாம் ஆண்டு நிறைவையொட்டி நேற்று முன்தினம் இடம்பெற்ற முன்களப்பணியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நோய் பரவாமல் இருப்பது தொடர்பில் மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதாரப் பணியாளர்களது கடமை மட்டுமல்லாது இந்த நோய் பரவாமல் இருப்பதற்கு சமூகத்தினது கடமையும் பொறுப்பும் மிக முக்கியமானதாக உள்ளது.

இந்த நோய்களுக்கு எதிராக நாங்கள் போராட வேண்டியவர்களாக உள்ளோம் என்பதுடன் இந்த பெரும் தொற்று காரணமாக நாட்டில் பல்வேறு வகையான பின்னடைவுகளும் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக பொருளாதார பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன.

அவற்றிலிருந்து நாங்கள் விடுபட வேண்டுமாக இருந்தால் இந்த நோய்க்கு எதிராக நாங்கள் செயற்பட வேண்டியுள்ளது.

தடுப்பூசி என்பது மிக முக்கியமான விடயம். இதனை சமூகத்தை நோக்கி நாங்கள் கொண்டு செல்ல வேண்டியவர்களாக உள்ளோம். இச் செயற்பாடுகளுக்கு சுகாதார உத்தியோகத்தர்கள், மருத்துவர்கள், சுகாதாரத்துறையினர் மக்கள் மத்தியில் சென்று சேவையாற்றி வருவதை நாங்கள் காண்கின்றோம். அவர்களோடு இணைந்து நாங்களும் கை கொடுத்து இந்த நோய் பாதிப்பில் இருந்து விடுபட ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தெரிவித்தார். (4-5-315)

# மதுபான போத்தல்களுடன் ஒருவர் கைது



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையில் அரச மதுபான போத்தல்கள் விற்பனை செய்வதற்காக கொண்டு சென்ற சமயம் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்கவிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (4-5-316-100)



கிளிநொச்சி மாவட்ட அனைத்து பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

(படம்:-சப்த சங்கரி, தேவானந்தம்)

# மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களுக்கு சுமார் 11 லட்சம் அபராதம்

(முறிகண்டி)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடுகுளம் நெத்தலியாறு பகுதியில் கடந்த 25 ஆம் திகதி சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 உழவு இயந்திரங்களுடன் 9 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

சம்பவம் தொர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு கடந்த 27 ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றில் சந்தேக நபர்கள் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது 5 உழவு இயந்திரங்களுக்கும் இலக்கத்தகடு இல்லாமை, வீதி அனுமதிப் பத்திரம் இல்லாமை, மது போதை உள்ளிட்ட பல குற்றச் சாட்டுக்கள் பொலிஸாரால் முன்வைக்கப்பட்டன.

இதன்போது குறித்த வழக்கிற்காக குற்றம் சுமத்தப்பட்டவர்களிடம் 11 இலட்சத்து 50 ஆயிரம் தண்டப்பணம் மன்றினால் அறவிடப்பட்டது.

கிளிநொச்சி நீதிமன்றில் அதிக தொகையில் தண்டம் அறவிடப்பட்டமை இதுவே முதல் முறையாகும் என தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (4-100-316)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

இரத்தத் தட்டுப் பாட்டினைக் கருத்திற் கொண்டு யாழ்.தமிழ் பவுண்டேஷன் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நாளை முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை உடுப்பிட்டி வல்வெட்டி நிமலேந்திரா தியேட்டரில் இடம்பெறும். மேற்படி இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (4-5-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்ஷ்டம் சில சமயம் சுக்கானில்லாத தோணியைக் கொண்டு வரும்.
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# எங்கள் மண்ணில் 13 பெற்ற பெருவாழ்வு

“கள்” பெற்ற பெருவாழ்வு என்று டாக்டர் மு.வரதராசனார் எழுதிய கட்டுரையைப் பலரும் படித்துச் சுவைத்திருப்பர்.

அதன் சுவை பருகத் தவறியவர்கள் கள் பெற்ற பெருவாழ்வைத் தேடிப்படித்தறிக.

நிற்க, இது “13” பெற்ற பெருவாழ்வு பற்றியது.

இப்படி நாம் கூறும்போது, உங்கள் நெற்றிப் புருவங்கள் சற்று உயரவே செய்யும்.

பொதுவில் 13 என்ற இலக்கம் எண்சோதிடத்தில் ஓரங்கட்டப்படுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

அதிலும் குறிப்பாக வெளிநாட்டவர்கள் 13 என்ற இலக்கத்தை தவிர்த்துவிடுவர்.

அந்தளவுக்கு அந்த இலக்கத்தின் மீது அவர்களுக்கு வெறுப்பும் எதிர்ப்பும் உண்டு.

இதன் காரணமாகவே வைத்தியசாலைகளில் விடுதிகளுக்கு இலக்கமிடும்போது 13 என்ற இலக்கம் வழங்கப்படுவதில்லை.

இதன் அடிப்படையிலேயே வைத்தியசாலைகளில் 13ஆம் இலக்கத்தில் விடுதி (Ward) இருப்பதில்லை என்பதை நாம் அறிய முடியும்.

இவ்வாறு உலக நாடுகளால் எழுதப்படாத யாப்பின் வழி தவிர்க்கப்பட்ட 13 என்ற இலக்கம் எங்கள் நாட்டில் எழுதப்பட்ட யாப்பாக – 13ஆவது திருத்தச் சட்டமூலமாக இடம்பிடித்து பெருமை பெற்றுள்ளது.

ஆம், ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வாக கொண்டுவரப்பட்டதே 13ஆவது திருத்தச் சட்டமூலம்.

இவ்வாறு பிரச்சினைக்குரிய ஓர் இலக்கம் பிரச்சினைக்குத் தீர்வாக அமையப்பெற்றதெனில் அதனை 13 பெற்ற பெருவாழ்வு என்று கூறிக்கொள்ளலாம்.

இதுமட்டுமா 13 பெற்ற பெருவாழ்வு என்று கேட்டால் இல்லவே இல்லை.

மாறாக இன்னும் பல வழிகளில் எங்கள் நாட்டில் 13 பெருவாழ்வு பெற்றுள்ளது.

ஆம், 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றும்படி இந்திய அரசிடம் கோரிக்கை விடும் பொருட்டு தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டுள்ளன.

உண்மையில் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் ஒன்றுபட்டு ஒருமித்து நின்ற வரலாறு ஒன்று உருவானதெனில் அது 13 இற்காக என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்.

தமிழ் அரசியல் தலைவர்களிடம் கருத்து முரண்பாடுகளும் உடன்படாத பிடிவாதங்களும் இருக்கின்றபோதிலும் 13 அவர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி 13ஐ முழுமையாக அமுல்படுத்துக என்று இந்தியப் பிரதமரைக் கேட்கின்ற அளவுக்கு ஓர் ஒற்றுமையைத் தந்துள்ளது.

இதை நாம் கூறும்போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று 13இற்கு எதிராக பேரணி நடத்தியதே என்று நீங்கள் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால், அங்கும் 13 பெருவாழ்வு பெற்றுள்ளது.

உண்மை, 13 எமக்கு வேண்டாம் என்று சொல்வதற்கும் முன்னணி தன் ஆதரவாளர்களை ஒன்றுபடுத்தியுள்ளதெனும்போது, எங்கள் மண்ணில் 13 பெற்ற பெருவாழ்வை நீங்கள் நிச்சயம் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்பலாம்.

# தேசிய அரசாங்கத்தை அமைக்க எந்தக் கட்சியுடனும் இணையத் தயார்

## ஐ.தே.க. பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன

(கொழும்பு)

நாட்டைப் பற்றி சிந்தித்து தேசிய கொள்கையை அமைப்பதற்கும் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கும் எந்தவொரு கட்சியுடனும் இணைவதற்கு தயாராக இருப்பதாக ஐ.தே.க. பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவது சிறப்பானதாகும் என்பதே எனது நிலைப்பாடாகும். நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமெனில் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசிய கட்சியும் மாத்திரமின்றி ஏனைய அனைத்து கட்சிகளும் ஒரே மேடையில் ஒன்றிணைய வேண்டும்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உலக நாடுகளில் பணவீக்கம் அதிகரித்துச் செல்லும் நாடுகள் பட்டியலில் 12 ஆவது இடத்திலுள்ள இலங்கை, எதிர்வரும் ஓரிரு மாதங்களுக்குள் 10 ஆவது இடத்தைப் பிடிக்கக்கூடும். அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் நாட்டில் மக்கள் வாழமுடியாத சூழல் ஏற்படும் என்றார். (ம)

# 13ஆவது திருத்தச் சட்டத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை

## வவுனியாவில் சிறீதரன் எம்.பி

(வவுனியா)

13வது திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13வது திருத்தச்சட்டத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. ஏனெனில் எமது மக்களை ஏமாற்றும் வகையில் பொய்யாக பிணையப்பட்டுள்ள சில விடயங்கள் அதில் இருக்கின்றன. மேலும் அதிலே தெளிவாகவும் சொல்லப்படவில்லை. அத்தோடு இது தொடர்பாக எங்களது கூட்டத்தில் ஆராய்ந்திருந்தோம். இந்தியாவிடம் நாங்கள் 13ஐ பற்றி கேட்கத்தேவையில்லை.

ஏற்கனவே இந்திய பிரதமர் மோடி கூட்டுறவு சமஷ்டி வேண்டும் என தெரிவித்துள்ளார். அதே போன்று இம்முறை நடைபெற்ற சட்டமன்ற தேர்தலின்போது ஈழத்திற்கான வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று தி.மு.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே ஜெயலலிதாவால் சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருந்தது. இவ்வளவு நடந்த பின்பும் நாங்கள் அதை கேட்பது காலத்திற்கு பொருத்தமானது என்று எனக்கு தோன்றவில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கோரிக்கை தொடர்பாக அவர்களிடம்தான் கேட்க வேண்டும். என்னுடைய கோரிக்கை 13வது திருத்தத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அடுத்தவர்களிடம் ஒப்பிட வேண்டாம். இது என்னுடைய கோரிக்கையாகும் என்று தெரிவித்தார்.

(ம-250.299)

# ஆட்சியைக் கைப்பற்றினாலும் நாட்டை முன்னேற்ற முடியாது

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

(கொழும்பு)

தற்போதைய நிலையில் தமது கட்சி ஆட்சியைப் பிடித்தாலும் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு பல மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.

நாம் நிச்சயமாக நமக்கு என்ற ஒரு பயணத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் நமது தலைவர்கள் திருந்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# நாட்டில் தொற்று அதிகரிப்பு பூஸ்டரை பெற்றுக்கொள்ளுங்கள்

## நாட்டு மக்களிடம் இராணுவத் தளபதி கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் கோவிட் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், பூஸ்டர் தடுப்பூசியை விரைவாகப் பெற்றுக் கொள்ளுமாறு மக்களை வலியுறுத்தி கேட்டுக் கொள்வதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், விசேட தடுப்பூசித் திட்டம் ஒன்று அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் பூஸ்டர் தடுப்பூசிக்கான நடமாடும் தடுப்பூசி நிலையங்கள் செயற்படுத்தப்படும் என இராணுவத் தளபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் இலங்கை இராணுவத்தின் தலைமையில் ஆயுதப் படையினரை களமிறக்கி ஒவ்வொரு குடிமகனுக்கும் தடுப்பூசிகளை வழங்குவதற்காக விசேட நிலையங்களை நிறுவியுள்ளோம். அடுத்த 2 வாரங்களில் நடமாடும் வாகனங்களில் தடுப்பூசி போடப்படும் என எதிர்பார்க்கிறோம் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உலகமே ஒரு கலாசாலை



உலகமே ஒரு பழைய பள்ளிக்கூடம்
ஒவ்வொருவருக்கும் அன்றாட வாழ்வில்
பல புதிய பாடம் சூழ் நிலைகட் கேற்ப
பலாத் காரமாகப் போதிக்கும். என்றும்
நலம் விரும்பும் அறிஞர் பலர் செய்யும் போதம்
நல் வாழ்வில் அவர்கள் சந்தித் தாராய்ந்த
சில முக்கிய நிகழ்ச்சிகளின் விளக்கமாகும்
சிந்தனையைச் செயல் திறனை ஒழுங்கு செய்யும்.

இந்த உலகம் ஒரு பழமையானதும், பெரியதுமான கலாசாலையாகும். சூழ்நிலைகளுக்கேற்றபடி உலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் தினந்தோறும் புதிய புதிய பாடங்கள் பலாத்காரமாகப் போதிக்கப்படுகின்றன. இந்தப் படிப்பை யாராலும் ஒதுக்கிவிட முடியாது. சமூக நலமே குறிக் கோளாகக் கொண்டு வாழும் அறிஞர்கள் அவ்வப்போது பல விதத்தில் மக்களுக்கு நற்பயன் விளைவிக்கும் சன்மார்க்கங்களையும், வாழ்க்கை அனுபவ நுட்பங்களையும் போதனை செய்து வருகிறார்கள்.

அவர்கள் வாழ்வில் சந்தித்த முக்கிய நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து, இன்ப துன்ப விளைவறிந்து வாழ்க்கைக்கு வழிகாட்டி வருகிறார்கள். இந்தப் போதனைகள் அனைத்தும் மக்களின் சிந்தனையை உயர்த்திச் செயல் திறமையை ஊட்டி வாழ்வை ஒழுங்குபடுத்தி வளப்படுத்துவனவாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

66



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

1.இரு விரல்களால் எடுக்கும் அளவு = ஒரு சிட்டிகை அல்லது விரற்கடி (வெருகடி)

2.மூன்று விரல்களால் எடுக்கும் அளவு = ஒரு திரிகடி

3.ஐந்து விரல்களால் பிடித்து மூடி எடுக்கும் அளவு = ஒரு கைபிடி

4.ஐந்து விரல்களை ஒன்று சேர்த்து நீட்டி அள்ளும் அளவு = ஒரு சிறங்கை அல்லது கதனை

5. கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் சேர்த்துப் பிடிக்கும் அளவு = ஒரு கைப்பாங்கு (கப்பாங்கு)

6.ஐந்து விரல்களையும் பிரித்துப் பாய்ச்சி அள்ளும் அளவு = ஒரு குத்து.

விபரம் படம் 4 இல் தரப்பட்டுள்ளது.

### முகத்தலளவாகு பெயர்

"எத்தனை மூடை விளைச்சல் கிடைத்தது? என ஒருவர் விவசாயியைப் பார்த்துக் கேட்பாராகில் மூடை என்ற சொல் குறிப்பிட்ட கொள்ளளவைக் கொண்ட நெல்லைக் குறிக்கிறது எனலாம்.

எனவே இங்கு மூடை அளக்கின்ற சாக்குப் பையைக் குறிக்காது நெல்லுக்காகி வருவதால் அது முகத்தலளவாகு பெயர் எனப்படுகிறது.

"வயலில் வேலை செய்தவர்களுக்கு இன்று எத்தனை படி தந்தார்கள்?" எனக் கேட்குமிடத்து படி என்ற அளவை நெல்லுக்காகி வருவதால் அது முகத்தலளவாகு பெயராகிறது.

பாற்கடைக்குச் சென்று "இரண்டு பக்கற் தாருங்கள்" எனக் கேட்டாலோ, எண்ணெய் விற்குமிடத்தில் "ஒரு போத்தல் தாருங்கள், அல்லது இரண்டு லீற்றர் தாருங்கள்" எனக் கேட்டாலோ அவை பாலையும் எண்ணெயையும் குறிப்பிடுவதால் முகத்தலளவாகு பெயர் எனப்படுகிறது.

எனவே, கொள்ளளவைக் குறிக்கின்ற லீற்றர், போத்தல், கலன், சிறங்கை (கையின் கொள்ளளவு) கொத்து, படி, சேர், பறை, வீசம், அவணம் போன்ற அளவீடுகள் தம்மைச் சுட்டாது தம்மால் அளக்கப்படும் பொருளைச் சுட்டுமிடத்து அவை அனைத்தும் முகத்தலளவாகு பெயராகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

### பல்லவர் காலத்து முகத்தல் அளவை

பல்லவ அரசர் காலத்தும் பல வகையான நாழிகள் வழக்கில் இருந்தன. அவை 1.கருநாழி 2.நால்வாநாழி 3.மாநாயநாழி 4.பிழையாநாழி 5.நாராயண நாழி முதலியன ஆகும்.

உறி என ஒரு முகத்தல் அளவைக் கருவி இருந்துள்ளது. பிருதிவீ மாணிக்க உறி என நிருபதுங்கவர்மன் மனைவியான பிருதிவீ மாணவிக்கம் பெயரில் ஒரு உறி அளவை இருந்துள்ளது. விடேல், விடுகு, உழக்கு என்பது பொதுவாக மூத்திரையிடப்பட்ட பல்லவர் கால முகத்தல் கருவியாகும்.

அஃது எல்லாப்பல்லவ அரசர் காலத்தும் இருந்து வந்ததாகலாம், எண்ணெய், நெய், பால் முதலிய வற்றை அளக்கப் பயன்பட்ட சிறிய அளவை பிடி எனப்பட்டது. இவை அன்றி, நெல் முதலியவற்றை அளக்கச் சோடு, நாழி, மரக்கால், பதக்கு, குறுணி, காடி, கலம் முதலிய அளவைகள் பயன்பட்டன.

### முகத்தலளவைக் கருவிகளில் மரக்கால்

முனைவர் சே.கரும்பாயிரம் இளநிலை ஆராய்ச்சி அலுவலர் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சென்னை மரக்கால் பற்றி ஒரு ஆய்வு செய்து கட்டுரை ஒன்று வெளியிட்டிருந்தார். அக்கட்டுரையின் சுருக்கமே இங்கு தரப்படுகிறது.

மரக்கால் என்பது பண்டைத் தமிழர் பயன்படுத்திய முகத்தலளவைக் கருவியாகும். அம்முகத்தலளவைக் கருவி அம்பணம், குறுணி, வள்ளம் முதலான வேறு பெயர்களையும் சுட்டுகிறது. அவ்வாறான அளவுைக் கருவிகளை இன்றளவும் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். அவற்றில் மரக்காலின் தோற்றம், உருவ அமைப்பு, அளவை முறைகள், அளக்கும் முறைகள், பயன்பாடு ஆகியன குறித்து இங்கு குறிப்பிடப்படுகிறது.

### மரக்கால்

மரக்கால் என்னும் சொல்லுக்கு முகத்தலளவைக் கருவி (சீவகசிந்தாமணி, 2486:4), அளவைக்கால் (திவாகரம்,7:183), அம்பணம் (ஐங்குறுநூறு,43:1), குறுணி (கணனுடையம்மன்பள்,10:3), தூம்பு (சூடாமணி,7:54), குளகம் (சூடாமணி,7:54), கச்சம் (சூடாமணி, 7:54),வள்ளம் (திருச்செங்கோட்டுப் பள்ளு,839:2), கடன் (தமிழ்ப் பேரகராதி,664), தொள்ளை (தமிழ்ப் பேரகராதி,2103), ஒரு மரக்கால் விதைப்பாடு (திருநெல்வேலி வழக்கு), உப்பளம் (பிங்கலம்,4:345), ஆண்டு மழையின் அளவு (தமிழ்ப் பேரகராதி,3082), ஆயிலியம் (சூடாமணி,11:189), சோதி (சூடாமணி,10:903), மாயவன் ஆடல் (சூடாமணி,10:903), மரத்தாற் செய்த பாதம் (தமிழ்ப் பேரகராதி, 3082), பதினெண் கூத்துகளுள் ஒன்று (கல்லாடம், 41:18) முதலான பல பொருள்களை இலக்கியங்கள், நிகண்டுகள், அகராதிகள் ஆகியன குறிப்பிட்டுள்ளன.

இவற்றில் மரக்காலானது முகந்து அளக்கப்பயன்படும் கருவிகளுள் ஒன்றெனை உணர்த்துகிறது. அம்பணம், குறுணி, தூம்பு, குளகம், கச்சம், வள்ளம், கடன், தொள்ளை ஆகியன அவற்றின் வேறு பெயர்களாகும். ஒரு மரக்கால் விதைப்பாடு என்பது ஒரு மரக்கால் நெல்மணி விதை விதைப்பதற்குரிய நிலத்தைக் குறிப்பிடுவதாகும். உப்பளம் முதலான பிற பொருள்கள் மரக்காலின் அளவு சார்ந்து குறிப்பிடவில்லை என்பதை அறிய முடிகிறது.

### மரக்காலின் சொற்பொருள்

மரக்கால் என்னும் சொல்லை மரம் + கால் என்று பிரிக்கலாம். மரம் என்பது மரத்தினையும் கால் என்பது அளவையும் குறிக்கும். கால் என்னும் சொல் நான்கில் ஒரு பாக அளவைக் குறிப்பதாகும். அச்சொல் மரக்காலைக் குறிக்கும் எனச் சூடாமணி நிகண்டு (11:225) கூறியுள்ளது.

பல்லவ, சோழர் ஆட்சி காலங்களில் கால் என்னும் சொல் வழக்கில் இருந்துள்ளது. சான்றாகப் பொற்கால் (கல்வெட்டுக் கலைச் சொல் அகரமுதலி, 387), சூலக்கால் (தமிழ்ப் பேரகராதி,1569) ஆகியவற்றைக் கூறலாம். பொற்கால் என்பது பொன்னால் செய்யப்பட்ட மரக்காலையும் சூலக்கால் என்பது சூலம் பொறிக்கப்பட்ட மரக்காலையும் குறிக்கும்.

எனவே கால் என்னும் அளவுக் கருவி மரத்தினால் செய்யப்பட்டதால் மரக்கால் எனக் காரணப் பெயர் பெற்றது எனலாம். முன்னோர்கள் மரத்தில் அளவுக் கருவிகளைச் செய்தனர் என்பதை, "வெதிருழக்கு நாழியாற் சேதிகைக் குத்தி" (கலித்தொகை,96:27) என்னும் பாடலடியில் மூங்கில் மரத்தாலான உழக்கு, நாழி என்று கூறுவதன்மூலம் அறியலாம்.

இங்கு உழக்கு, நாழி ஆகியன மூங்கிலால் செய்த அளவுக் கருவிகள் எனப் பொருள்படும். நீண்ட காலமாக மரத்தால் செய்த மரக்கால் இன்று இரும்பு, பித்தளை ஆகிய உலோகங்களால் செய்யப்படுகிறது. அதற்கு மக்கள் இரும்பு மரக்கால், பித்தளை மரக்கால் ஆகிய பெயர்களைச் சொல்லி அழைக்கின்றனர். இன்றைய காலத்தில் இரும்பு, பித்தளை ஆகிய உலோகங்களால் மரக்கால் செய்தாலும் அவற்றினை இரும்புக் கால், பித்தளைக் கால் என்று கூறாமல் நீண்ட காலமாக மரத்தால் செய்த மரபினால் இரும்பு மரக்கால், பித்தளை மரக்கால் என்று கூறுவதன்மூலம் மரபினை நோக்க முடிகிறது.

### அம்பணம்

பழந்தமிழர் 'அம்பணம்' என்னும் சொல்லை மரக்காலுக்குப் பயன்படுத்தியுள்ளனர். இச்சொல்லை அம்பு + அணம் எனப் பிரிக்கலாம். அம்பு என்பது வட்டத்தையும் அணம் என்பது ஈற்றையும் குறிக்கும். வட்டம் என்பது வளைவாக இருப்பதாகும்.

எனவே வளைவாக உடைய பொருள்களை அம்பணம் குறிக்கும் என உணரலாம். சான்றாக அம்பணம் எனக் குறித்த சொல்லுக்கு மரக்காலுடன் துலாக்கோல் (தமிழ்ப் பேரகராதி,95), ஆமை (சூடாமணி, 11:182), தோணி (சூடாமணி 11:182), யாழ்வகை (தமிழ்ப் பேரகராதி, 95), ஆகிய வேறு பெயர்கள் வழங்குகின்றது.

அவற்றில் மரக்காலின் அடிப்பகுதி, துலாக்கோலில் அளக்கப் பயன்படும் தட்டு, ஆமை உடம்பின் மேற்பகுதி, தோணியின் அடிப்பகுதி, வளைந்து இருக்கக்கூடிய யாழ் ஆகிய அனைத்திலும் வட்ட வடிவத்தைக் காண முடியும்.

மேற்கூறியவற்றிலிருந்து அம்பு என்னும் சொல்லடியாகப் பிறந்த அம்பணம் என்னும் சொல் வட்ட வடிவமுடைய பொருள்களைக் கூறிக் காரணப் பெயராக அமைவதைக் காணலாம்.

'அம்பணம்' என்னும் சொல் மரக்கால் அளவையை உணர்த்தும் சொல்லாகப் பழந்தமிழ் இலக்கியங்களான ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம் ஆகியன கூறியுள்ளன. ஐங்குறுநூற்றில் "அம்பணத் தன்ன ஆமை" (43:1) என்கிறது பாடலடி. இங்கு அம்ப ணத்தின் வடிவம் ஆமைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

அதாவது ஆமையின் மேல் பகுதி வளைந்து இருக்கும். அது போல அம்பணமும் வளைவாக உடையது எனப் புலப்படுகிறது. ஆமையைத் திருப்பிப் போட்டால் அம்பணத்தின் வடிவத்தைப் போல் இருப்பதைக் காண முடியும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 பேர்...

20 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15, 420 ஆக உயர்வடைந்துள்ளது. (ம)

## நாவற்குழி...

சிவராசா சுகிர்தா (வயது-55) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கி சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் பயணித்த பெண்ணே ஏ9 வீதி நாவற்குழிப் பகுதியில் பேருந்தில் இருந்து இறங்கியுள்ளார்.

இறங்கிய பெண் வீதியோரமாக இருந்த மண்பிட்டியில் கால் வைத்தபோது கால் தடுமாறி பேருந்தின் சக்கரத்திற்குள் விழுந்துள்ளார். குறித்த பெண் வீதியில் விழுந்ததை கவனிக்காமல் பேருந்து அங்கிருந்து புறப்பட்டது.

இதன்போது பெண்ணின் தலை பேருந்தின் பின்பக்க சில்லில் நசியுண்டது. உடனடியாக மீட்கப்பட்ட பெண் பட்டாரக வாகனத்தின் உதவியுடன் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் அவர் உயிரிழந்ததாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (ம-30,104)



















## ஆயிரத்தைக்...

இதற்கமைய, நாட்டில் கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 610,103 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## அனுரகுமார...

றுள்ளது.

தாக்குதலின்போது அங்கிருந்தவர்களிடையே சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டதுடன், பின்னர் பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

## பெப்ரவரி...

நாடு முழுவதும் ஒமிக்ரோன் வைரஸ் பரவும் அபாயம் உள்ளதாக சுகாதார பணியகத்தின் பிரதி சுகாதார பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் எச்சரித்துள்ளார்.

ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுப்பரவல் வேகமாக தாக்கத்தை செலுத்தி வருகின்ற நிலையில், சுகாதார வழிமுறைகளில் எவ்வாறான மாற்றங்களை முன்னெடுக்க நேரிடும் என்பது குறித்தும், அடுத்த கட்ட அச்சுறுத்தல் நிலைமைகள் குறித்தும் தெளிவுபடுத்தும்போதே அவர் இதனைக் கூறினார்.

நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகளில் அதிகளவான ஒமிக்ரோன் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

தற்போது அடையாளம் காணப்படும் கோவிட் -19 வைரஸ் தொற்றாளர்களில் 50 வீதத்திற்கு அதிகமானவர்கள் ஒமிக்ரோன் வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர்.

எனவே தடுப்பூசி மூலமாக மட்டுமே எம்மால் நிலைமைகளைக் கட்டுப்படுத்த முடியும். இரண்டு தடுப்பூசிகளை ஏற்றிக் கொண்ட சகலரும் மூன்றாம் தடுப்பூசியை கட்டாயமாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ம)

## "சமஷ்டி"...

தமிழ் மக்கள் 70 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற வடக்கு- கிழக்கு இணைந்த தாயகத்தில் தமிழ்த்தேச அங்கீகாரத்தையும், அதனுடைய தனித்துவமான இறைமையையும், சுயநிர்ணய உரிமையையும் முழுமையாக அனுபவிக்கக் கூடிய "சமஷ்டி" அடிப்படையிலான தீர்வை அடைய இந்திய அரசும் ஏனைய நட்பு நாடுகளும் இலங்கையை வலியுறுத்த வேண்டும் என கிட்டுப் பூங்கா பிரகடனத்தில் அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை 13 ஆம் திருத்தச் சட்டத்தினுள் முடக்கும் சதிமுயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நல்லூரில் மாபெரும் பேரணி இடம் பெற்றது. நல்லூர் கிட்டுப் பூங்காவில் மாபெரும் பேரணி நிறைவுற்றதைத் தொடர்ந்து அங்கு பொதுக் கூட்டமும் இடம்பெற்றது. இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழ்த் தேசியப் பேரவை ஆகியன இணைந்து வெளியிட்டிருந்த கிட்டுப்பூங்கா பிரகடனம் அங்கு கூடியிருந்த பெருந்திரளான மக்கள் மத்தியில் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த பிரகடனத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-18,33)

## அமுல்படுத்து...

வர்கள் முன்வரவில்லை என்றார்.

சில அரசியல்வாதிகள் இங்குள்ள இளைஞர், யுவதிகளை பிழையாக வழி நடத்துகிறார்கள்.

கிடைக்காது என தெரிந்துகொண்டும் அதனைப் பெற முயற்சிக்கிறோம் என இளைஞர்களை தூண்டி விடுகிறார்கள். அது சாத்தியமல்லாத விடயம்.

எத்தனை இளைஞர், யுவதிகளை இவ்வாறான அரசியல்வாதிகளின் போராட்டத்தின் மூலம் இழந்துவிட்டோம். எத்தனை இளைஞர், யுவதிகள் வடக்கில் தமது எதிர்காலத்தை இழந்து விட்டார்கள்.

வடக்கில் உள்ள இளைஞர்களுக்கு நான் கூறிவைக்க விரும்புகின்றேன். உங்களை பிழையாக வழிநடாத்தும் அரசியல்வாதிகளுக்கு பின்னால் செல்லாதீர்கள். உங்களுக்கு நல்ல சிறப்பான எதிர்காலம் உள்ளது. உங்களுக்கு முன்னால் உலகம் உள்ளது. உலகத்தை நோக்கி உற்றுப்பாருங்கள். ஆனால் அரசியல்வாதிகளுக்கு பின்னால் செல்லாதீர்கள்.

அத்தோடு இந்த 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி கடிதம் அனுப்பினார்கள். அவ்வாறு அனுப்புவதன் மூலம் ஒரு நாடு கிடைத்துவிடுமா?

ஏற்கனவே 13 ஆம் திருத்தச் சட்டம் இங்கே நடைமுறையில் உள்ளது. அதனை நாங்கள் பேசி அதனை நடைமுறைப்படுத்துமாறு கோரினால் அது சாத்தியப்படும். அதை விடுத்து நாங்கள் கடிதம் அனுப்புவதன் மூலம் அது நடைபெறாது.

அத்தோடு நானும் வெளிவிவகார அமைச்சரும் எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதியுடன் தமிழ் பேசும் அனைத்து கட்சியினரையும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை நாங்கள் விரைவில் செய்ய உள்ளோம். அவ்வாறான சந்திப்புகள் மூலம் இங்கு உள்ள பிரச்சினைகள் தொடர்பில் நாங்கள் பேசி அதற்குரிய தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றார். (ம-33,104)

## தொழி...

இதற்கு எதிராக இலட்சக்கணக்கான மக்களுடன் வீதிக்கு இறங்கி போராடுவதற்கும் தயாராகவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கெக்கிராவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

நாட்டின் வளங்களை நடு இரவில் விற்கும் அரசாங்கம், தொழிலாளர்களை ஒடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி மக்கள் பக்கமே நிற்கும். கடந்த தேர்தல் மேடைகளில் எமது எதிர்தரப்பு வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய போலியான வாக்குறுதிகளை நம்பி பெருமளவான மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர் என்றார். (ம)

## மின் துண்டிப்பை...

துண்டிப்பை ஏற்படுத்த வேண்டாம் என சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெப்ரவரி 7ஆம் திகதி முதல் மார்ச் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஹோமாகம பகுதியில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது, கல்வி அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (ம)

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KBK** கந்தர்மடம்/ கொழும்புத்துறை

A/L கணக்கீடு A/L 2022, A/L 2023

தரம் 10, 11 வணிகமும் கணக்கீட்டுக்கல் வியும்

**Mr.K.BALAKAJEN** (9924)

உங்கள் அனுமதிகளுக்கு:- 077 216 8884

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

# யப்பான் சைக்கிள்

**அறிவுள்ளோரின் தெரிவு**



1. லேடீஸ் சைக்கிள்கள்
2. யென்ஸ் சைக்கிள்கள்
3. கியர் சைக்கிள்கள்
4. மடக்கும் சைக்கிள்கள்
5. பாரம் ஏற்றும் சைக்கிள்கள்
6. LED ஓட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்
7. Baby சைக்கிள்கள்

யப்பான் சைக்கிள் விற்பனை செய்ய விரும்புவர்கள் தொடர்பு கொள்ளவும். விஷேட விலைக்கழிவு உண்டு.

விற்பனைக்கு பிந்திய சேவைகள் (திருத்த வேலைகள்)

இலகுவான ஓட்டம் பாட்ஸ் தாராளமாக உண்டு. கழுவிப் பூட்டுதல், திருத்த வேலைகள் இல்லை. நீண்டகாலப் பாவனை. (C-3675)

**யப்பான் சைக்கிள் B பசார்**

கந்தரோடை றோட், சுன்னாகம் (சுன்னாகம் சந்தியிலிருந்து கந்தரோடை றோட்டில் 500m) 078 615 5929

வெளிநாடுகளுக்கான

# துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே:- 021 222 3536

**அருள்**

| | | |
|---|---|---|
| இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை. | இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. |

தொ.பே:- 076 443 1576 (C-3669)

## ICOF – வளர்பிறை உளவளத்துணை நிலையம்

**அகக் குழந்தையை குணப்படுத்தும் பயிற்சிபட்டறை**

**(Healing the Inner Child Workshop)**

Since- 1994 Reg.No J/DS/SS/NGO/31

வளர்பிறை உளவளத்துணை நிலையத்தின் ஏற்பாட்டில் 04.02.2022 தொடக்கம் 06.02.2022 வரை **"உணர்வுகளை வெளிப்படுத்தலும் நெறிப்படுத்தலும்"** எனும் தலைப்பில் மூன்று நாள் பயிற்சிபட்டறை நிறுவனத்தின் இயக்குநரால் நடாத்தப்படவுள்ளது.

- பயிற்சிக்காலம் :- 25 மணித்தியாலங்கள். வெள்ளி, சனி, ஞாயிறு (9.00 - 5.00)
- பயிற்சியின் பின்னர் சான்றிதழ் வழங்கப்படும்.
- முடிவுத் திகதி :- 03.02.2022
- தகுதியானவர்கள் தமது பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- அனுமதிக் கட்டணம் :- 1000.00

16 வயதுக்கு மேற்பட்டவர்களின் கோபம், பயம், கவலை, குற்றவுணர்வு, வெட்கம், மனவடு ஆகிய உணர்வுகளிலிருந்து மீண்டு மகிழ்வாய் வாழ்வதற்கான இசை ஊடான நடன வெளிப்பாட்டின் உளச்சிகிச்சை பயிற்சிபட்டறை.

**வளர்பிறை உளவளத்துணை நிலையம் (ICOF)**

**இல 05, பிளர்ச்சஸ் லேன், சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.**

**தொடர்புகளுக்கு : 077 266 0209, 021 222 8238** (9921

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9876)

076 825 7716 (ஆகாஸ்)

## பல் தேவைகளுக்கான நிலம் விற்பனைக்கு உள்ளது

**Multi Purpose Land for Sale**

வவுனியா கொரவப்பொத்தான வீதியில் வவுனியாவிலிருந்து திருகோணமலை செல்லும் A29 பெரிய வீதியில் நகரத்துடன் இணைந்த 1 Km இனுள் இறம்பைக்குளம் பகுதியில் 105 அடி முகப்பு நீளமுடைய 10 1/2 பரப்பு விஸ்தீரணம் உடைய மேட்டுக் காணி விற்பனைக்கு உண்டு.

கல்யாண மண்டபங்கள், உல்லாச விடுதிகள் மற்றும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கு ஏற்ற வகையில் முன் பார்வைக்கு அழகான Lake view, அமைதியான சுற்றுப்புறங்கள், வாகனத் தரிப்பிடங்களைக் கொண்ட, வற்றாத நல்ல குடிநீர் கொண்ட இடம் விற்பனைக்கு உண்டு.

பகுதிகளாகப் பிரித்தும் கொடுக்கப்படும். (9908)

077 777 0035 thanuraj@gmail.com

## Vacancy For English Language Teachers at Pearson International College

- Must have good level of language proficiency and grammar knowledge.
- Must possess diploma/ HND/B.sc in English or any academic qualification in English medium.
- Teaching experience will be considered as an additional benefit.

Interested candidates are invited to submit their updated resume through email at : pearsoncollege2020@gmail. com by 10th February 2022

(9934)

No.21, 3rd Lane, Power house road, Jaffna. Tel: 074 188 7878

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-3577)

0768226240 DHL

## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**

(C-3667)

விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள் **V2 TRAVELS**

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்) அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 20'000/- பயிற்சியின்போது - 15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777-068-777 v2vacancies@gmail.com

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (9947)

## வீட்டு உதவியாளர் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு உதவிகள் செய்யக்கூடிய மற்றும் இரண்டு வயது குழந்தையை பார்க்கக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

இடம் - சாவகச்சேரி (9948)

077 700 2552

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் வீதியில் மெயின் றோட்டில் இரண்டாவது காணி கண்ணகை அம்மன் கோவில் வீதியில் 4 பரப்புக் காணி 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு. **(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 2.5 Km தூரம்)**

தொடர்பு:- (9950)

077 658 5999

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 4 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

**நாவற்குழி சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம்.** வீடமைப்பதற்கு நல்ல சூழல். (நிலப்பரப்பு) **ஒரு பரப்பின் விலை** 3.5 இலட்சம்.

தொடர்பு (9949)

076 890 9259

077 015 0353

## ஆசிரியர்கள் தேவை

தெல்லிப்பளைச் சந்திக்கு அருகாமையில் ஆரம்பமாக இருக்கின்ற புதிய கல்வி நிலையம் ஒன்றிற்கு தரம் 6 – 11 வரை கணிதம், விஞ்ஞானம், தமிழ் உட்பட சகல பாடங்களும் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். (9881)

077 834 3666

## பதில் பணிப்பாளருக்கு கொரோனா

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் கொரோனாத் தொற்றிற்குள்ளாகியுள்ளார்.

இதேவேளை, வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கே.சயந்தனும் கொரோனா தொற்றிற்குள்ளாகியுள்ளார். (ம)

## ஹம்சியா மெடிகிளினிக் + பற்சிகிச்சைப் பிரிவு

(Reg. NO.PHSRC/MC/340)





நவீன உபகரணங்களின் உதவியுடன் பற்சிகிச்சை நிபுணர்களினால் நிரந்தர பல்கட்டுதல், கிளிப்போடுதல் உட்பட அனைத்து சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம். (C-3671)

578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.(யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக இலங்கை வங்கிக்கு [illegible]) T.P: 077 220 [illegible]769, 077 375 4490

## வாடகைக்குண்டு

பருத்தித்துறையில் அல்வாய்ப் பகுதியில் வீடுகளும் வீட்டுத்தோட்டம் செய்யக்கூடிய நிலமும் குறைந்த முற்பணத்துடன் வாடகைக்குண்டு.

தொடர்பு (C-3670)

077 285 5028

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org